15-4-54

# கண்ணன்


குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

416

416
2.54

REGISTRAR OF BOOKS
1954



2 அணா

# கேட்டீர்களா!

## ராஜாஜி மந்திரி சபை ராஜிநாமா

சென்ற தேர்தலுக்குப் பிறகு இந்த ராஜ்யத்தில் முதல் மந்திரியாக இருந்து மிகவும் சிறப்பாக நிர்வாகத்தை நடத்தியவர் ராஜாஜி. அவர் உடல் நலம் காரணமாகப் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அவருடைய மந்திரி சபையும் ராஜிநாமாச் செய்து விட்டது. சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவராக ஸ்ரீ காமராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவரை மந்திரி சபை அமைக்கும் படி சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா கேட்டுக்கொண்டிருக்கிறார். புதிய மந்திரி சபை புது வருஷப் பிறப்பன்று பதவி ஏற்கிறது.

## ஸ்ரீ காமராஜ் நாடார்

ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர் தாலுக்காவில் பிறந்தவர் ஸ்ரீ காமராஜ் நாடார். இவருக்கு 51 வயது ஆகிறது. 3-ஆம் படிவம் வரையிலுமே இவர் பள்ளியில் பயின்றிருக்கிறார். ஆயினும் உலக அநுபவப் பள்ளியில் உயர்ந்த படிப்புப் படித்தவர். சலியாத உழைப்பு, இடைவிடாத முயற்சி, தேசபக்தி, பரோபகார சிந்தனை இவையே இவருடைய வாழ்க்கையின் வெற்றிக்கு ஆதாரமானவை. காலஞ் சென்ற தேசபக்தர் சத்தியமூர்த்தியிடம் இவருக்கு அளவிலாத மதிப்பும் அன்பும் உண்டு. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக சென்ற 14 வருஷங்களாக (நடுவில் சில மாதங்கள் நீங்கலாக) இருந்து வருகிறார்.

## ஜலவாயுக் குண்டு (ஹைட்ரோஜன் குண்டு)

அமெரிக்கா ஜலவாயுக் குண்டு தயாரிப்பதிலும் அதை வெடித்துப் பரீட்சித்துப் பார்ப்பதிலும் மும்முரமாய் ஈடுபட்டிருக்கிறது. இந்தக் குண்டு வெடித்தால் எத்தகைய விபரீதம் நிகழும் என்று ஊகித்துக்கூடப் பார்க்க முடியவில்லையாம். உலகையே ஐந்து குண்டுகள் இருந்தால் அழித்துவிடலாமாம் ஜலவாயுக் குண்டு வெடிப்பதற்கு அதனுள் அடங்கியிருக்கும் அணுக்குண்டு முதலில் வெடிக்கவேண்டும் இந்தக் கொடிய குண்டு தயாரிப்பதைத் தடுக்கவேண்டும் என்று நேரு முதலானோர் கூறுகிறார்கள்.

## உலகில் தங்கம்

உலகத்தில் இன்று தங்கம் இருப்பு எவ்வளவு இருக்கிறது, தெரியுமா? 4665 கோடி டாலர் மதிப்புள்ள தங்கம் புழக்கத்தில் இருக்கிறதாம். ஒரு டாலர் சுமார் ரூ. 4-8-0 மதிப்புக்கொண்டது. இந்தக் கணக்கில் ருஷ்யாவைச் சேர்ந்த நாடுகளிலுள்ள தங்கம் சேர்க்கப்படவில்லையாம்.

## அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் இந்த மாதம் 16, 17, 18, தேதிகளில் அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு நடைபெறுகிறது இதற்கு உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார். இந்தியப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு மகாநாட்டை ஆரம்பித்துவைக்கிறார்.

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 8

15-4-'54

| | |
|---|---|
| குழந்தைகளே! | பக்கம் 2 |
| சந்திரகிரிக் கோட்டை | .. 3 |
| வீண் பெருமை | .. 9 |
| பூனை பெயர் | .. 13 |
| தங்கச் சிறகு | .. 19 |
| பெருமைக்காரர் | .. 22 |
| ஏமாந்தது யார்? | .. 25 |
| மகா யோக்கியன் | .. 26 |
| கேளுங்கள், சொல்லுகிறேன் | .. 29 |
| கண்ணன் கழக அங்கத்தினர்கள் | 31 |
| அசட்டுப் பிச்சு | .. 33 |
| எங்கள் பகுதி | .. 38 |
| கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை | |
| பேறு நண்பர்கள் - மூன்றாவது அட்டை | |

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## மூன்று புத்தகங்கள்

**சமர்த்து மைனா - கி. வா. ஜ.**

மைனா, குயில், குரங்கு, பூனை முதலிய பறவைகளையும் மிருகங்களையும் வைத்து எழுதிய கதைகள். அவற்றின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எழுதிய உண்மைக் கதைகள். விலை அணா 8.

★

**விஞ்ஞானம் பேசுகிறது - பெ.நா.அ. & ஜே. [illegible]மா.**

தந்தி, ரேடியோ, ஏரோப்ளேன் முதலியவைகள் எப்படி வேலை செய்கின்றன, யார் கண்டு பிடித்தார்கள் என்பவைகள் எல்லாம் படங்களாகவே விவரிக்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

REGISTRAR OF BOOKS MAY 1954

★

**விளையும் பயிர் - கி. வா. ஜ.**

காந்தி, ஜவாஹர், டாகூர், பாரதி முதலியோர் உங்களைப் போல் குழந்தைகளாக இருந்தபோது எப்படி இருந்தார்கள், என்ன செய்தார்கள் என்பவை கதைகள் போலவே சொல்லப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

கண்ணன் காரியாலயம்
மயிலாப்பூர் : : சென்னை-4.

# குழந்தைகளே!

உங்கள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இந்தப் புது வருஷம் உங்கள் அனைவருக்கும் பல நலன்களையும் மகிழ்ச்சியையும் அள்ளிச் சொரியவேண்டுமென வாழ்த்துகிறேன். ஜய என்னும் இந்த ஆண்டு உங்களுக்கு அனைத்திலும் ஜயத்தையே அளிப்பதாக! அஷ்ட லக்ஷ்மிகளில் ஒருவரான ஜயலக்ஷ்மியின் அருள் உங்களுக்குப் பரிபூரணமாகக் கிடைப்பதாக!

சென்ற இதழில், 'மாஸ்டர் பாலகுமார்' என்ற சித்திரத் தொடர் கதை முடிந்துவிட்டது குறித்து உங்களுக்கு இவ்வளவு கோபமும் வருத்தமும் ஏற்படும் என்று எனக்குத் தெரியாது. தீப்பொறி பறக்க நீங்கள் அனைவரும் கடிதம் எழுதியிருப்பதைப் பார்த்துப் பயந்தே போனேன். கதை முடிந்துவிட்டால் முடித்துவிட வேண்டியதானே!

இந்த இதழில் வேறு ஒரு சித்திரக் கதை ஆரம்பிப்பதாகத் தெரிவித்திருந்தேன். பலர் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. எனவே அவர்களும் கவனிக்கவேண்டி இந்த இதழின் மூன்றாவது அட்டையில் விளம்பரம் செய்திருக்கிறேன். எல்லாருடைய கண்ணிலும் படுவதற்குத்தானே விளம்பரம்? விளம்பரம் செய்யாமல், பல குழந்தைகளுக்கு முன்னதாகச் சொல்லாமல் ஒரு புதிய கதையை ஆரம்பிப்பது சரியல்ல. அடுத்த இதழில், 'தூங்கும் அழகி' என்ற அந்த அற்புதமான சித்திரக்கதை ஆரம்பமாகிறது.

'அசட்டுப் பிச்சு' புது வருஷ ஆரம்பத்தில் விடைபெற்றுக் கொள்ளப்போகிறான் என்று தெரிவித்ததும் பெரிய தொந்தரவாகப் போய்விட்டது. 'எங்கள் பகுதி'க்கு வந்துள்ள எல்லாக் கடிதங்களிலும் அதைப் பற்றி வருத்தம் தெரிவித்து எழுதியிருக்கிறார்கள். அசட்டுப் பிச்சு 'பிரமாதம்', 'ஏ-1' என்றெல்லாம் சக்கைப்போடு போட்டிருக்கிறார்கள். அசட்டுப் பிச்சு விரைவில் புத்தக உருவில் வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த இதழில் 1-4-54 இதழ் பற்றிய விமரிசனம் வருகிறது. எல்லாக் குழந்தைகளும் 22-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எழுதிவிடுங்கள். இனி அடுத்த இதழ் வரும் வரையில் நீங்கள் காத்திருக்கவேண்டாம் 1-4-54 இதழ் விமரிசனம் முடிந்ததும் ஓய்வு இருக்கும்போது அடுத்த இதழ் பற்றிய விமரிசனத்தையும் எழுதியனுப்பிவிடலாம்.

அடுத்த இதழில் புதிய சித்திரத் தொடர்கதையுடன் ஒரு பரிசுப்போட்டியும் வெளியிடலாம் என்றிருக்கிறோம். பரிசுப் போட்டி முற்றிலும் புதுவிதமாக இருக்கும். எதிர்பாருங்கள்.

ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.



# சந்திரகிரிக் கோட்டை

‘ஜனா’

பாளையக்காரர் தயக்கத்துடன் புலிக் குட்டியைப் பார்த்து, "சொல்வதைச் சீக்கிரமாகச் சொல். நேரம் ஆகிறது!" என்றார்.

"எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. ஒருவர் வில்லை வளைத்து அம்பு எய்த பிறகு மறுபடி ஒருவர் முயல்வதைவிட இருவரும் ஒரே சமயத்தில் வில்லை எடுத்துக் குறி பார்ப்பதுதான் சிறந்தது. மேடையில் இன்னொரு கத்தியும் ஊசியும் வைத்துவிட்டால் இது சுலபமாகும். இரண்டு பேருக்கும் அதைரியம் இல்லாமல் இருக்கும். இப்படி ஏற்பாடு செய்ய வெகு நேரமும் ஆகாது" என்றான் புலிக் குட்டி.

இப்படி அந்தச் சிறுவன் கூறியது மீண்டும் சபையினரிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கியது. பெரும்பாலோருக்கு அவன் சொல்லும் யோசனை மிகவும் சிறந்ததாகப் பட்டது.

"ஆம் ஆம்; இது மிகவும் பொருத்தமான யோசனை. ராஜகுமாரர்கள் இருவருக்கும் சமசந்தர்ப்பம் கொடுக்கத்தான் வேண்டும்!" என்ற பேச்சு பாளையக்காரரின் காதுக்கு எட்டியது. முதலில் அவர் சிறிது தயங்கினார். ஆனால் சகோதரர்கள் இருவருக்குமே இந்த ஏற்பாடு இணக்கமாக இருக்கும்போல இருந்தது. அதனால் அவர் இரட்டையர்களைப் பார்த்து, "அப்படியே செய்யலாமா?" என்றார்.

அமலனும் விமலனும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்ததும் அடுத்த சில விநாடி நேரத்தில் மேடையில் மற்றொரு கத்தி செருகி வைக்கப்பட்டது. அதில் ஓர் எலுமிச்சம் பழத்தையும் நடுவே ஒரு மெல்லிய ஊசியையும் செங்குத்தாகச் செருகி வைத்தார்கள். அந்த ஊசியின் முனையும் சகோதரர்களிடம் சரிவர இருக்கிறதா என்று காட்டப்பட்டது.

அமலனும் விமலனும் மந்தகாசத்துடன் நின்ற புலிக் குட்டியை ஒரே சமயத்தில் பார்த்துவிட்டு மேடைக்கு எதிரே போய் நின்றார்கள். மற்றொரு வில்லும் இதற்குள் வந்துவிட்டது.

இரண்டு பேரும் மீண்டும் சபையினருக்கு வணக்கம் தெரிவித்து விட்டுத் தம் தம் வில்லைக் கையில் எடுத்துக்கொண்டார்கள்.

சபை மிகுந்த அமைதியுடன் இந்தக் காட்சியைக் கவனித்துக் கொண்டிருந்தது. பாளையக்காரர் கண் கொட்டாதபடி ஓர் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

இவரும் வில்லை வளைத்தார்கள். அம்பைத் தொடுத்து நாணேற்றினார்கள். 'ஙொய்' என்ற ரீங்காரத்துடன் இரண்டு அம்புகளும் மின்னல் வேகத்துடன் பளிச் சென்று சீறிச் சென்றன.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் இரண்டு சரங்களும் எதிரே கட்டியிருந்த மரத் தட்டியைத் துளைத்துக் குத்திக்கொண்டு பாய்ந்தன.

'ஹோ' என்று சபை ஆரவாரம் செய்து உற்சாகத்தையும் பரபரப்பையும் காட்டியது. ஆனால் எல்லாருடைய கண்களும் ஊசிகளையே குறிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தன. பாளையக்காரர் துடியாக மேடைக்கு வந்தார். கத்தியும் எலுமிச்சம் பழமும் வைத்தது வைத்தபடியே இருந்தன. இரண்டு பழத்திலும் இருந்த ஊசிகளை மட்டும் காணவில்லை. அவை அம்பின் தாக்குதலால் பழத்தைவிட்டு எகிறிப் போயிருந்தன. பாளையக்காரர் குனிந்து ஊசிகளைப் பக்கத்தில் தேடிப் பார்த்தார். அவருக்கு உதவியாக அவருடைய சேனைத் தளபதியும் வந்து தேடிப் பார்த்தார்.

இளைஞர் கூட்டமோ பொறுமையை இழந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தது. பெண்கள் பகுதியினர், 'இஸ்..உஸ்' என்று ஆவல் மிகுதியினால் சற்றைக் கொருதரம் பெருமூச்செறிந்தனர். புலிக் குட்டி ஒரு கம்பத்தில் சாய்ந்துகொண்டு பாளையக்காரரையே கூர்ந்து கவனித்த வண்ணமாக இருந்தான்.

"இதோ ஓர் ஊசி இருக்கிறது!" என்று தளபதி எதிர்ப்புறத்திலிருந்த தட்டிக்கு அருகே குனிந்து எடுத்தார். "இதோ மற்றொன்று!" என்று அதற்கு அருகாமையிலேயே இருந்த மற்றோர் ஊசியையும் இன்னொரு கையில் எடுத்துக்கொண்டார். இரண்டு ஊசிகளும் அமலனுக்கும் விமலனுக்கும் நேர் எதிரே நடு மையமாகக் கிடந்தன.




குருடன்: கண்ணில்லாதவன் ஐயா! ஒரு காலணா இருந்தால் போடுங்க, சாமி!

ஒருவர்: (ஒரு செல்லாத காலணாவைப் போடுகிறார்) இந்தா!

குருடன்: என்னய்யா குருடன்னு செல்லாத காலணாவைப் போடுறீங்க?''



பாளையக்காரர் ஊசிகளின் முனையைக் கூர்ந்து ஆராய்ந்தார். சபை சட்டென்று நிச்சப்தத்தில் மூழ்கி நின்றது. கவலை தோய்ந்த பாளையக்காரரின் முகம் திடீரென்று தெளிவடைந்தது. அவர் முகத்தில் மலர்ச்சி தோன்ற, “நல்ல காலம்! யாருடைய ஊசி எது என்று எப்படி நிர்ணயிப்பது என்று கவலைப்பட்டுப் போனேன். ஆனால் இரண்டு ஊசி முனைகளுமே உடைந்து போயிருக்கின்றன. பலே, பலே!” என்று அவர் உற்சாகத்துடன் உரக்க அறிவித்தார்.

இந்த அறிவிப்பைக் கேட்டதும் அண்டமே அதிருவதைப்போல சபையில் ஆரவாரம் எழுந்தது. வெற்றி தோல்வியைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சிக்கு இடமில்லாமல் போன காரணத்தால் அந்த ஆரவாரம் விரைவிலேயே அடங்கிவிட்டது. இருவருமே பெருமைபட வெற்றி வீரர்களாகத் திகழ்ந்ததைக் கண்டு சபை அமைதியாக இருந்தது.

பாளையக்காரர் இரு சகோதரர்களையும் இரு கைகளாலும் தழுவிக் கொண்டு, “வீரத்திலும் வில் வித்தையிலும் எங்கள் சந்திரவர்ம அரசருக்கு ஏற்றவர்களே நீங்கள்! உங்களில் யார் தோற்றிருந்தாலும் எனக்குச் சங்கடமாகத்தான் இருந்திருக்கும். ஆயினும் மற்ற இரு போட்டிகளிலும் யாரேனும் ஒருவர் வெற்றி பெற்றேதான் தீர வேண்டியிருக்கும். என் கடமைக்கு இது பெரிய சோதனைதான். வெற்றி பெறாதவரிடத்திலும் எனக்கு மதிப்பும் அன்பும் இருக்கும். இன்றைப் போட்டி முடிந்துவிட்டது. நாளைப் போட்டி இதே நேரத்தில் வீரமாநேரி கரையில் நடைபெறும். நகரப் பெருங்குடி மக்கள் அனைவரும் அங்கே திரண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்” என்று கூறி முடித்தார்.

பிறகு தடதடவென்று கூடியிருந்த மக்கள் எழுந்து கலைந்து சென்றனர். கூட்டத்திலிருந்து புலிக் குட்டி எப்போது மறைந்து சென்றான் என்பதே இரட்டையர்களுக்குத் தெரியவில்லை. கம்பத்தினருகே நின்று கொண்டிருந்தவன் எப்படித்தான் அவர்கள் கண்களில் படாமல் வெளியேறிச் சென்றானோ!

**வி**ல்வித்தைப் போட்டி காலை நேரத்திலேயே முடிவடைந்து விட்டது. அமலனும் விமலனும் ஒருவர் முகத்தை ஒருவர் அந்தக் கணம் முதல் எறிட்டுப் பார்க்கவே விரும்பவில்லை. இவர்களுடைய மன ஓட்டத்தைப் பாளையக்காரர் ஒருவாறு ஊகித்துக்கொண்டு விட்டார். ஆயினும், 'இது இயற்கை




தான்' என்ற எண்ணத்தில் பேசாமல் இருந்துவிட்டார்.

ஆடம்பரமான முறையில் சகோதரர்களுக்கு விருந்துபசாரம் நடைபெற்றது. அவர்களைக் காணவந்த நகரத்துப்பிரமுகர்களுடன் சிறிது நேரம் அளவளாவிய பிறகு இருவரும் ஓய்வு கொள்ளத் தனித் தனியே விடப்பட்டார்கள்.

அமலனுக்கு இருப்பே கொள்ளவில்லை. மறுநாள் எத்தகைய போட்டி நடைபெறுமோ, என்ன நேருமோ என்று மனம் சஞ்சலப் பட்டுக்கொண்டேயிருந்தது. அவன் தங்கியிருந்த கூடகோபுரத்தின் மூன்ருவது சாளரத்திலிருந்து ஊரின் அமைப்பைப் பராக்காகப் பார்த்துக்கொண்டேயிருந்தான். வெகுதூரத்தில் பாளையக்காரர் குறிப்பிட்ட வீரமாநேரி, கடல் பரப்பைப் போல் கண்ணுக்கு எட்டிய வரையில் விரிந்து கிடந்தது. சூரியன் அப்போது உச்சி வானில் இறங்கத் தொடங்கியிருந்தான்.

அமலன் படிக்கட்டுக்களிலிருந்து தீர்மானமான முடிவு எதுவும் செய்துகொள்ளாமல் கீழே இறங்கிவந்தான். அப்போதெல்லாம், 'இந்தப் புலிக்குட்டி யார்? நேற்று மலைக் குகையில் கண்டவனும் இன்று சபாமண்டபத்தில் கண்டவனும் அவனே தானு? அப்படியானல் எப்படி அவன் நாங்கள் வருவதற்கு முன்பாகக் காளி கோயிலுக்கு வந்திருந்தான்? பாளையக்காரக்கு அவன் என்ன வேண்டும்? அவனை இப்போது பார்ப்பதென்ருல் எப்படிப் பார்ப்பது?' என்ற எண்ணங்கள் தோன்றிக்கொண்டிருந்தன. புலிக்குட்டியைத் தனிமையில் சந்தித்து அவனோடு நட்புக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவனுக்குக் கிளர்ந்து எழுந்தது. பேசுவதற்கு ஆள் இல்லாமல் விமலனுடன் பேசவும் விரும்பாமல் அவன் மனம் தவியாகத் தவித்தது. ஒருகால் அரண்மனையை விட்டு வெளியில் சென்ருல் அவனைக் காணக்கூடும் என்ற நம்பிக்கை சிறிது உதித்தது. பஞ்சகல்யாணியை லாயத்திலிருந்து கொண்டு வந்து போவதென்ருல் அதில் பல சங்கடங்கள் இருந்தன. விமலனுக்கும் அது சந்தேகத்தை உண்டாக்கக் கூடும். எனவே ஒருவரும் அறியாமல் கால் நடையாகவே செல்வது என்று காவற்கூடங்களையெல்லாம் தாண்டி ஆசாரவாசலையும் கடந்து வெளிவந்தான். இரு மருங்கிலும் பசு மடங்களும் பஜனைக் கூடங்



களும் அன்ன சத்திரங்களும் பண்டக சாலைகளுமாக இருந்தன.

அந்த விசாலமான ராஜ வீதியின் மறு கோடியில் இருந்த சிவாலயத்தின் தங்கஸ்தூபி சூரியனொளியில் தகதகவென்று கண் கூசும்படி பிரகாசித்துக் கொண்டிருந்தது. உச்சி வெயில் நேரமானதால் வீதியில் ஆள் நடமாட்டமே இல்லை.

அமலன் ஊரின் அமைதி நிரம்பிய அழகைக் கவனித்துக் கொண்டே சிவாலயத்தின் ஓரமாகச் சென்ற ஒற்றையடிப் பாதையின் வழியே நடந்து சென்றான். பாதை மாமரங்களடர்ந்த தோப்புக்களின் வழியாகச் சென்றது. மாமரங்கள் சிறு செம்பு அளவுக்குத் தரையிலிருந்தே குலுங்கக் குலுங்கக் காய்த்துத் தொங்கின. சிவந்த நிறக்கனிகளும் மஞ்சள் பசந்த நிறமுள்ள முற்றிய காய்களும் பார்க்கப் பார்க்க நாவில் உமிழ்நீர் ஊறச் செய்தன. அமலன் கைக்கு எட்டிய உயரத்திலிருந்த கிளை ஒன்றில் செம்பழமாகத் தொங்கிய மாங்கனி ஒன்றை லாவிப் பறித்தான்; கடித்துச் சுவைத்துப் பார்த்தான். ஆகா, என்ன ருசி! என்ன இனிப்பு! அமிர்தம் என்று சொல்கிறார்களே அது இவ்வளவு இன்சுவையுடன் இருக்குமா, என்ன?

அமலன் காலாற நடந்து சென்றான். வெயிலின் கடுமையே தெரியாதபடி மாங்காற்று குளிர்ச்சியாக ஜிலுஜிலுவென்று வீசிக்கொண்டிருந்தது. ஊருக்கு ஒதுப்புறமாகச் சென்ற அந்த காலடிப் பாதை ஏரிகரையை நோக்கிச் சென்றது. வந்ததுதான் வந்தோம் ஏரிகரையில் போய், சிறிது அமைதியாக உட்கார்ந்திருந்து விட்டு வரலாம் என்று அமலன் எண்ணினான்.

ஏரிகரையின் அழகு மிகவும் ரம்மியமாக இருந்தது. மா, கொய்யா, குளஞ்சி, அத்தி முதலிய கனிகள் நிறைந்த சோலை ஒரு புறத்தில் இருந்தது. வேண்டியவரையில் அந்தக் கனிவகைகளைப் பறித்து எடுத்துக்கொண்டு மேடும் நிழலுமாக இருந்த மரத்தடியில் வந்து படுத்துக் கொண்டான். விமலன் இந்நேரத்தில் என்ன செய்துகொண்டிருப்பானோ என்ற சிந்தனை சிறிது தலை காட்டிற்று. போட்டி என்றதும் அவனுடைய போக்கே தலைகீழாக மாறி விட்டதே என்று அவனுக்கு விநோதமாக இருந்தது. தன்னுடைய குணம் மட்டும் சிறிதும் மாறவில்லை என்றுதான் அவனுக்குத் தோன்றிற்று.

இந்தச் சமயத்தில் இலைகள் சலசலக்கும் சத்தம் பின்னால் கேட்டது. அமலன் முதலில் அதை லட்சியம் செய்யவில்லை. அந்தச் சத்தம் அதிகமாகவே, தலையைத் திருப்பிப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் யாரோ கிளைகளைத் தள்ளி ஒதுக்கிக்கொண்டு நடந்து வருவது தெரிந்தது.

'வருவது புலிக்குட்டியாக இருந்தால்—?' என்று ஓடியது அவன் ஆசை.

என்ன ஆச்சரியம்! அவன் இவ்விதம் எண்ணி முடிப்பதற்குள் புலிக்குட்டியின் முகச் சாயல் இலைகளுக்கு நடுவே நன்றாகத் தெரிந்தது. ஆம்; வந்தவன் புலிக்குட்டிதான்!

இவன் எப்படி இங்கே இந்தச் சமயத்தில் வந்தான்! இது எப்படித் தற்செயலாக நிகழ்ந்தது! அமலனுடைய அனந்தத்துக்கு ஓர் எல்லையே இல்லை. (தொடரும்)

# வீண் பெருமை

## தில்லைவாணன்

பொன்னுசாமியின் 'ஹேர் கட்டிங் ஸலூன்' பேர் போனது. 'கியூ'வில் உட்கார்ந்து காரியத்தை முடித்துக்கொண்டு வரவேண்டும் அங்கே. ஒரு விஷயத்தில் பொன்னுசாமி கரூர்ப் பேர்வழி. 'தயை தாட்சிண்யமின்றிப் பொதுஜன சேவை' என்பது அவனுக்கே தகும். பெரியவர்கள், சிறியவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், வேண்டியவர் - வேண்டாதவர் என்ற வித்தியாசமே பாராட்ட மாட்டான். முன்னல் வந்தவருக்கு முன்னல், பின்னல் வந்தவருக்குப் பின்னல். கடை ஆரம்பித்த அன்று தொட்டு இன்று வரை அவன் பின்பற்றும் நியதி இது.

வருகிறவரை நமஸ்காரம் செய்து வரவேற்று, மரியாதையுடன் அமரச் செய்துவிட்டு, பொன்னுசாமி தன் வேலையில் ஈடுபடுவான். அதே சமயம், வந்து உட்கார்ந்திருப்போரை வரிசைக் கிரமத்தில் ஞாபகம் வைத்துக் கொள்வான். இந்த ஞாபகம் அவனுக்கு என்றும் தவறுது. ஒருவர் வேலை முடிந்து எழுந்து போனல், ''நீங்க வாங்க ஸார்'' என்று வேறு ஒருவரைக் கணக்காய்ப் பார்த்து அழைப்பான். ''எனக்கு முந்தி, உனக்கு முந்தி'' என்று யாரும் அவசரப்பட முடியாது.

தினமும் காலை எழு மணிக்குத் திறக்கும் கடையை மாலை ஆறு மணிக்குத்தான் மூடுவான். வேலை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. இந்த நியதியிலிருந்தும் தவற மாட்டான். ஞாயிற்றுக் கிழமை வந்துவிட்டால் அவனுக்கு மூச்சுவிடக்கூட நேரமிருக்காது. ஒரு வார வருமானம் அன்று மட்டுமே அவனுக்குக் கிடைத்து விடும்.

என் சிண்டை உதறித் தள்ளி விட்டு, கிராப்பு வைத்துக் கொண்ட நாள் முதல் நான் பொன்னுசாமிக்கு வாடிக்கைக் காரன். ஞாயிற்றுக்கிழமைகளில் அவன் கடையை நான் எட்டிக் கூடப் பார்க்க மாட்டேன். 'கியூ'வில் மணிக்கணக்காகக் காத்துக் கொண்டு என்னல் உட்கார்ந்திருக்க முடியாது. இதனலேயே நான் மற்ற எந்த நாளாவது காலையில் அவன் கடைக்கு விஜயம் செய்துவிடுவேன். அப்படிப் போகும் முதல் பேர்வழி நானகத்தான் இருப்பேன். அவனும் கணக்காக, அவசரமின்றி, ஆற அமர என் தலையைப் பதம் பார்த்து அனுப்புவான். எட்டணக் கட்டணத்தைச் செலுத்திவிட்டு, நிலைக் கண்ணடியில் என் தலையழகையும் முக அழகையும் பார்த்துவிட்டு வந்து விடுவேன்.

ஆனல் அப்படி வருவதற்குள் ஓர் அநுபவம் எனக்கும் பொன்னுசாமிக்கும் உண்டு. பொன்னுசாமி

## தலைபோகிற காரியம்




**எஜமான்: ஏண்டா, முனியா. என்னடா தலைபோகிற காரியம்? கூப்பிட்டேனே, எங்கே போயிருந்தே?**

**முனியன்: இல்லீங்க, க்ஷவரம் செய்துகிட்டு வரப் போயிருந்தேனுங்க!**

---

பேச்சில் சூரன். ஏதாவது பேசாமல் இருக்க மாட்டான். பேசிக்கொண்டே வேலை செய்வதில்தான் அவனுக்குப் பிரியம். ஞாயிற்றுக் கிழமையில், தலை தெறிக்கும் வேலை மிடுக்கில், சூழ்ந்து உட்கார்ந்திருக்கும் ஜன சந்தடியில் அவனால் இது முடியாது. ஆகவே தான் மற்ற நாட்களில், அவன் வட்டியும் முதலுமாகப் பேசித் தீர்த்துவிடுவான். அதிலும் நான் போய்விட்டால் கேட்கவே வேண்டியதில்லை. சாவி கொடுத்த கிராமபோன் பெட்டியாக மாறிவிடுவான். போன தடவை அவனை நான் பார்த்த நாளிலிருந்து அன்றுவரை ஊரிலும் வெளி உலகத்திலும் நடந்ததையும், தான் கேட்டதையும் கேட்காததையும், பார்த்ததையும் பார்க்காததையும் சரம் கோத்தாற்போல், கோவையாகக் கதையாகச் சொல்லுவான். அது மட்டுமல்ல. எனக்குத் தெரிந்ததையெல்லாம் நானும் சொல்லியாக வேண்டும்.

இப்படித்தான் ஒரு நாள் அவனிடம் போயிருந்தபோது பொன்னுசாமி என்னைக் கண்டதுமே மிகுந்த ரொம்ப உற்சாகம் அடைந்தவன்போல் காணப்பட்டான். ஏதோ ஓர் அதிசயத்தை என்னிடம் கூற என் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தவன்போல் தென்பட்டான்.

வேலை ஆரம்பமாயிற்று; கூடப் பேச்சும் தொடங்கியது:

“ஸார், உங்களுக்குப் பங்காரு சாமியைத் தெரியுங்களா?”

“எந்தப் பங்காருசாமியைச் சொல்கிறாய், பொன்னுசாமி?”

“அவர்தானுங்க, பெரிய மேடைப் பிரசங்கி!”

“ஓகோ, அந்தப் பங்காரு சாமியையா சொல்றே?” என்றேன் நான் வியப்புடன். ஏனெனில் இந்தப் பங்காரு சாமியை ஒரு வாரத்துக்கு முன் வரையில் நான் நேரில் பார்த்தறியேன். நல்ல பிரசங்கி என்று அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அவர் பேச்சைக் கேட்டதில்லை.

ஒரு வாரத்துக்குமுன் நான் மாயவரம் ஜங்ஷன் பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருந்தபோது, ஒருவர் ரெயில் வண்டியிலிருந்து இறங்கினார். அங்கே ஒரு கும்பல் நின்றுகொண்டிருந்தது. மாலை போட்டு அவரை வரவேற்றார்கள். எனக்கு அவர் யார் என்று விளங்கவில்லை. ஒருவரை விசாரித்தேன்.




"இவரைக் கூடத் தெரியாமல் இருக்கீங்களே! இவர்தான் பங்காருசாமி. நல்ல பேச்சாளி. நீங்க கேள்விப்பட்டதில்லையா?" என்று அந்த ஆள் என்னை மடக்கிக் கேட்டுவிட்டார். எனக்கு வெட்கமாய் போய்விட்டது. 'ஏன் கேட்டோம்?' என்று ஆகிவிட்டது.

அதன் பிறகு பங்காருசாமியை நான் நன்ருய்ப் பார்த்துத்தெரிந்து கொள்ளாமல் இருப்பேனு? அவரைக் கூர்ந்து கவனித்தேன். அந்தக் கும்பலில் நானும் ஒருவனுகிவிட்டேன்.

இப்பொழுது பொன்னுசாமி அவரைப்பற்றியே பேச்சை ஆரம்பித்துவிட்டான். அவன் என்ன சொல்லப்போகிருன் என்பதைக் கேட்க என் ஆவல் அதிகரித்தது.

"பங்காருசாமி ஒரு மாதத்துக்கு முன் நம்ம ஊர் மைதானத்திலே பேசினுரே, கேட்டீங்களா? பேச்சு எப்படி?" என்று கேட்டான்.

"என்னைக் கேட்டால் எப்படித் தெரியும்? நான்தான் அப்பொழுது ஊரில் இல்லையே! இங்கு வந்து பேசினுர் என்று தினசரியில் பார்த்துத்தான் அறிந்தேன்."

"அடடா! நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிட்டீங்க, போங்க. நீங்க அவரைப் பார்த்திருக்கீங்களா; பேச்சைக் கேட்டிருக்கீங்களா?"

"என்னமோ, எனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கலையப்பா. நீ கேட்டாயில்லையோ?"

"நான் கேட்காமல் இருப்பேனுங்களா? அதற்குத்தான் தவம் கிடந்தவனுச்சே. இன்னெருபாக்கியமும் எனக்குக் கிடைச்சுதுங்க."

"என்ன, என்ன? சொல்."

"அன்னைக்கி ஆறரை மணிக்குப் பங்காருசாமி பேசறதா

நோட்டீசுகொடுத்திருந்தாங்களா? வேலையிருந்தாலும், இல்லாட்டாலும், சாயங்தரம் ஆறு மணி வரையில் நான் கடையைத் திறந்து வச்சிருப்பது உங்களுக்குத் தெரிஞ்சது தானுங்களே. மணி ஆறடிச்சி, கடையைச் சாத்தப் போனேனுங்க. அப்போ பாருங்க, ஒருத்தர் அவசர அவசரமா வந்தாருங்க. முக க்ஷவரம் செய்யணுமாம். கூட்டத்துக்குப் போகணும்னு எனக்கு அவசரம். முடியாதுன்னு சொல்லிடத்தான் பார்த்தேன். ஆனல் மனசு கேக்கலே. போனல் போறதுன்னு ஒப்புக்கிட்டேன். வேலை செய்து அனுப்பிவிட்டேனுங்க. அவர் முகம் பால் வடியும் முகம். சதா சிரித்த பாவம் தோணிச்சுதுங்க. ஒரு ரூவா பிரியமாக் கொடுத்துட்டுப் போனருங்க. எனக்கு ஒரே சந்தோஷம். பங்காருசாமி பேச்சைக் கேட்கப் போற அவசரத்தில் இப்படி ரூபா கிடைச்சதில் ரெட்டிப்புச் சந்தோஷம். கூட்டத்துக்குப் போனதும் என் சந்தோஷம் கட்டு மீறிப் போச்சுங்க. என் என்று கேட்கிறீங்களா? அந்த ஆசாமி வேறு யாருமில்லீங்க. பங்காருசாமி தான். எப்படியோ என் கடையைத் தெரிஞ்சு வந்திருக்காருங்க. என் வேலைத் திறமையைக் கேள்விப் பட்டிருக்காருங்க. எனக்கு முன்னமே தெரியாமல் போச்சு. தெரிந்திருந்தால் காசு வேணும்னு சொல்லியிருப்பேன். மனசு ஒரே அலைச்சலா அலைஞ்சுதுங்க. ஆனல் ஒரு திருப்தி. ஊரெல்லாம் புகழ் பெற்ற பெரிய பேச்சாளி பங்காருசாமிக்கு என் கையாலே க்ஷவரம் செய்தேனுங்களே, அதைச் சொல்லுங்கோ. இந்த ஊரிலே எந்தப் பயலுக்கும் கிடைக்காத பாக்கியம் எனக்குக் கிட்டிச்சுங்க. அன்னைக்கி என்னமாப் பேசினருங்க! நீங்க கேக்காமல் போயிட்டீங்களே!'' என்று கூறி முடித்தான் பொன்னுசாமி.

அவன் சொல்லியதைக் கேட்டு வந்த எனக்குச் சிரிக்க வேண்டும் போலத் தோன்றிற்று. ஆனல் நான் சிரிக்கவில்லை.

''பொன்னுசாமி! நீ பாக்கியசாலிதான்'' என்றேன். அதற்குள் வேலையும் முடிந்தது. காசைக் கொடுத்துவிட்டு வெளிவந்தேன்.

பொன்னுசாமி இப்படிக் கூறிப் பெருமை யடித்துக்கொள்வதைத் தடுக்க நான் விரும்பவில்லை. ''நீ சொல்வது பொய். கதை எழுத வேண்டியவன்; தவறிப்போய் ஸலூன் வைத்துவிட்டாய்'' என்று சொல்ல என் வாய் துடியாய்த் துடித்தது.

என் தெரியுமா?

ஒரு வாரத்துக்கு முன் பங்காருசாமியை மாயவரம் ஜங்ஷனில் பார்த்திருந்தேன்; இல்லையா? அப்பொழுது அவர் தாடி வளர்த்திருந்தார். ஒரு சாண் நீளங்கூட இருக்கும். ஒரு மாதத்துக்குமுன் அவர் முக க்ஷவரம் செய்துகொண்டிருந்தால், இவ்வளவு தாடி எப்படி வளர்த்திருக்க முடியும்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

பங்காருசாமி இங்கு வந்திருந்தார் என்பதை வைத்துக்கொண்டு பொன்னுசாமி இப்படி ஒரு கதையைக் கற்பனை செய்து பெருமையடித்துக்கொள்கிருன். இதைப் போல அவன் யார் யாரிடம் சொல்லிக்கொண்டு வருகிருனே? அவனுடைய சுபாவம் இது; மாற்ற முடியாது.

# புனை பெயர்

**எஸ். கணேசன்**

## 1

(ஞாயிற்றுக்கிழமை பகல் மணி பதினொன்று. ராகவேந்திரன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு உத்தரக் கட்டையைப் பார்ப்பதும் ஏதோ எழுதுவதுமாக இருக்கிருன்.)

**ராகவனின் அம்மா:** (17-ஆவது தடவையாக) ராகவா! ராகவா! அட ராகவா! சாப்பிட வரப் போறயா, இல்லையா? மணி பதினொண்ணு ஆகப்போகிறது.

**ராக:** (கோபமாக) எனக் கொண்ணும் சாதமும் வேணும், மண்ணும் வேணும். ஒரு நிமிஷம் மனுஷனைச் சும்மா விடாமல்! சேச்சே, சேச்சே!

**அம்மா:** சாப்பிட்டுவிட்டுப் போனு உன்னைப் பிறகு எதுக்கு டாப்பா கூப்பிடறேன்? எனக்கும் அசதியாயிருக்கு. போய்ப் படுத்துக்கவேண்டாமா?

(ராகவன் சாப்பிட உட்காருகிருன்.)

**அம்:** (கேலியாக) அட அப்பா, 'மனுஷா!' என்னடாப்பா செஞ்சுண்டிருந்தே இத்தனை நாழி? கதை எழுதிண்டிருந்தயா?

**ராக:** (பெருமையாக) அப்படிக் கேளம்மா!—'வெல்லப்பாகு' பத்திரிகையிலே ஒரு புதுப் பரிசுப் போட்டியின் அறிக்கை வந்திருக்கு. என்ன தெரியுமா? அடுக்கு மொழியிலேயே ஒரு முழுக்கதை எழுதணுமாம்! இரண்டாவது பரிசு 'பார்க்கர்' பேனு!

**அம்:** முதற் பரிசு என்னடா?

**ராக:** அதுவா? அதை நான் சொல்லமாட்டேன்.

**அம்:** ஏண்டா?

**ராக:** அதைத் தட்டத்தானே பாடுபடறேன்? அதைக்கொண்டு வந்து நேரிலேயே காட்டறேன்.

**அம்:** (கேலியாக) அடாடா டாடா!

**ராக:** (கோபமாக) ஆமாம்! வீட்டிலே இருக்கறவங்களே இப்படி 'டிஸ்கரேஜ்' பண்ணிணு உருப்பட்டாப் போலத்தான்.

**அம்:** சரி சரி, கோவிச்சுக் காதே. (கெஞ்சுவதுபோல) முதல் பரிசு என்னன்னு சொல்ல மாட்டாயா?

**ராக:** சரி! நீ இவ்வளவு கேட்கறதனுலே ரகசியமாச் சொல்றேன். முதல் பரிசு—ஒரு சைக்கிள். புத்தம் புதிய சைக்கிளாக்கும்!

**அம்:** அடேடே! அதிருக்கட்டும், கார்த்தாலே அடுத்த வீட்டுக் குண்டுமணியோடு என்ன சண்டை? ஏதோ கத்திண்டு இருந்தாயே!

(ராகவனுக்குப் பதினெட்டு வயதாகிவிட்டது. லேசாக மீசை அரும்பியிருந்தது. அந்தப் பூனை மீசை இப்போது பட படவென்று துடிக்கிறது.)

**ராக:** அதுவா? அவன் 'மரப்பட்டை'க்கு அடிக்கடி கதை எழுதருன். அவனைப் போய் இந்தப் போட்டி அறிக்கையைக் காட்டி, "நீயும் எழுதப் போற

யா?"ன்னு கேட்டால் அந்த மொட்டைப் பயல் என்னை முறைச்சுப் பார்த்து, "என் உளவறிஞ்சுண்டு போக வந்தயா? நானும் அந்தப் போட்டிக்குப் எழுதப்போறேன். நான் கதை எழுதறபோது என் வந்தே?"ன்னு கேட்டான். அதோடில்லாமல் "எழுத்தாளர்கள் எல்லாம் தாங்கள் முன்னேறத்தான் பார்ப்பார்கள், பிறரைக் கைதூக்கி விடமாட்டார்கள்" என்று அழுத்தலாக, அகங்காரமாக, அலட்சியமாக..

அம்: அடேடே! நன்னு அடுக்கு மொழி பேசறியே!

ராக: அப்படிச் சொல்லு! அந்த மொட்டைப்பயல் கர்வத்தை... அதிருக்கட்டும், நான் என்ன புனை பெயர் வச்சுக்கறது சொல்லு. 'பூபதி'யா, 'வானம்பாடி'யா, 'குஞ்சு'வா இல்லாட்டா 'வான் மதி'யா?

அம்: 'பூபதி'யும் வேணும், 'வான் மதி'யும் வேணும். உன் பெயரின் கடைசிப் பகுதியான 'இந்திரனை'யே போட்டு எழுது.

ராக: அடடா! அம்மா, உன் மூளையே மூளை! அப்படியே கொண்டு போய் அதை மியூஸியத்துலே வைக்கணும்! அப்படியே செய்யறேன்... அதாவது நீ சொன்னபடியே செய்கிறேன்.

(போகிறான்.)

## 2

(மத்தியான்னம் மூன்று மணி. ராகவனின் அறை)

ராக: என்னடா இது! ஒண்ணும் உருப்படியா எழுதல்லே. ஒவ்வொரு வாக்கியமும் பாதியோட நின்னுபோறதே! அடுக்கு மொழிப் போட்டியாம்! சுத்த 'ராட்டன்' போட்டி!

(அவன் தங்கை பானு வருகிறாள்)

பானு: டே, ராகவா! அம்மா காபி சாப்பிடக் கூப்பிட்டா உன்னை. போ! காபி குடிச்சா மூளை நன்னு 'வொர்க்' பண்ணும்.

(ராகவன் போகிறான். பானு அங்கிருந்த காகிதங்களை எடுத்துப் பார்க்கிறாள்.)

பானு: என்ன இது? அடுக்கு மொழியிலே 'பெரியவர்' கதை எழுதறார் போலிருக்கு.

(சில வாக்கியங்களைப் படிக்கிறாள்.)

"அடுக்கு மொழி அம்பலவாணனை அறியாதவர்கள் அதிர்ஷ்டம் அற்றவர்கள்"—அடடா!— "நான்கே நாளில் நாற்பது ரூபாயை நாசம் செய்த நாசகாலா!"—அம்மாடியோ! அடுக்கு மொழி அம்பலவாணன் எங்கே போனான்? காற்றிலேயா? ஓகோ! இது வேறு கதையின் வாக்கியம் போல இருக்கு...

"பாடம் படிக்காமல் படங்களுக்குப் போய்ப் பணத்தைப் பாழாக்கும் பாவிப் பயலே!"— ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணி தான். இதைப்படிக்கறவன் பரிசா கொடுப்பான்? உதை கொடுக்காமல் இருந்தால் போதாதா?

(ராகவன் வருகிறான்)

ராக: எய்! என் அதையெல்லாம் படிக்கறே? இங்கிருந்து போ. (பானு போகப் பார்க்கிறாள்.) நில்! ஒரு புனை பெயர் சொல்லி விட்டுப் போ.

பானு: புனை பெயர்தானே? நிறையச் சொல்கிறேன். 'மல்லிகா' 'சுமதி', 'நளினி', 'துளசி'.

ராக: போதும்! நிறுத்து! உனக்குப் புனை பெயர் கேக்கலே. எனக்கு என்ன வச்சுக்கலாம் சொல்லு.

பானு: அப்படியே இருந்தாலும் பரவாயில்லே. நீ இப்போ 'வெல்லப்பாகு'க்குத்தானே எழுதறே? அதன் ஆசிரியர் 'வால்மிளகு' யார் தெரியுமா? என் 'கிளாஸ் மேட்' பத்மாவின் அப்பா! அவருக்கு இன்னொரு பொண்ணு 'நளினி'ன்னு இருந்து செத்துப் போயிடுத்தாம். இப்போ 'நளினி' என்ற பேருலே யாரு என்ன கதை எழுதி அனுப்பினாலும், அது எவ்வளவு மோசமாயிருந்தாலும் உடனே 'பப்ளிஷ்' ஆயிடும்! இதைப் பத்மாவே என் கிட்டச் சொன்னாள். அதனாலே—

ராக: ராகவேந்திரனை நளினியா மாறச் சொல்றயாக்கும்?

பானு: ஆமாம். அப்படி மாத்தினால் உன் கதைக்கு நிச்சயம் முதல் 'பிரைஸ்' கிடைக்காட்டா, கேள் என்னை.

ராக: ஆமாம், என்னைப் போலவே உன் சிநேகிதிகளின் அண்ணாக்களெல்லாம் நளினி என்கிற பேருலே—

பா: எழுத மாட்டா. என்னு, என்னைத் தவிர, வேற யாரண்டையும் பத்மா தன் வீட்டுச் சமாசாரங்களைச் சொல்வதில்லே. நான்தான் அவளுக்கு 'டியரெஸ்ட் பிரெண்ட்!'



ராக: (குஷியுடன்) சரி, அப்படியே செய்யறேன்.



## 3

(பானு போனதும் ராகவனின் 'காபி குடித்த மூளை' வேலை செய்கிறது)

ராக: ஆகா! — "புலவர்கள் புகழும் புவனகிரியில் புன்னகை புரளும் புது முகத்துடன் புரவி மீதேறிப் புகுந்தான் -" ....ஐயோ! புகுந்தது யார்? புண்டரீகன்னு போடலாமா? சேச்சே! வேற நல்ல பெயர் என்ன? புஷ்பநாதன்... ஊஹூம்; வேண்டாம்....

அம்: (உள்ளிருந்து) என்ன, முந்தி ஜபல்பூரிலே சிநேகமா இருந்தாரே ஒரு ஸேட், அவர் உங்களைக் காண வந்திருந்தார் மத்தியானம் ஒரு மணிக்கு.

அப்பா: யாரு? புருஷோத்தமதாஸா?

ராக: அடடா! புருஷோத்தமன். பேஷ்! (புருஷோத்தமன் என்றெழுதி வாக்கியத்தை முடிக்கிறான்.) அடுத்த 'ஸென்டென்ஸ்'க்கு என்ன செய்யறது? (சிறிது யோசித்து) ஆ!— "அவனது அறிவும் அழகும் அங்கிருந்தோரை அதிசயத்தில் ஆழ்த்தின!"

அடடா! இந்தக் காபிக்குத்தான் என்ன சக்தி! அபாரம்!! அற்புதம்!!!


(இப்படியே மூன்றாவது வாக்கியம், நாலாவது வாக்கியம் என்று ஒரு மணி நேரத்தில் ஓர் அற்புதமான அடுக்கு மொழிக் கதை தயாராகிறது. அதற்கு 'நளினி'யின் பெயர் போடுவதுகூட அவசியமில்லை. இருப்பினும் எதற்கும் இருக்கட்டுமே என்று 'நளினி'யையே போட்டு, கதையைத் தபாலில் சேர்க்கிறான். திரும்பிவரும் வழியில்..)

ராக: (மனத்திற்குள்) குண்டுமணி பிரபல எழுத்தாளனாச்சே. அவனும் எழுதுகிறானாமே! இந்தப் போட்டியில் எனக்கே முதல் பரிசு வரணும், கடவுளே!

(குண்டுமணி சோர்ந்துபோய் எதிரில் வருகிறான்.)

ராக: ஏண்டா, குண்டுமணி! ஏன் உன் முகம் சூரியனைக் காணாத செந்தாமரையைப் போலவும், சந்திரன் இல்லாத வானத்தைப் போலவும்—

குண்டு: நிறுத்தடா! காலையிலிருந்து மண்டையைப் போட்டு



உடைச்சுக்கறேன், முழுசா ரெண்டு வார்த்தை அடுக்கு மொழியா வரலே.

ராக: அடடா! சாதாரணமாகவே உன் கதைகளில் நிறைய அடுக்கு மொழிகள் வருமேடா!

குண்: இப்போ சட்டுனு ஒரு வாரத்துக்குள்ளே அடுக்கு மொழிகளா எழுதவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதனாலே கற்பனை வற்றி விட்டதப்பா!

(போகிறான்.)

ராக: (மனத்திற்குள்) உன் கற்பனை ஒன்றும் வற்றி விடவில்லை. என்னிடம் வந்து தஞ்சம் புகுந்துவிட்டதப்பா, குண்டுமணி. நன்றாக வேண்டும் உனக்கு. ஆகா! ஒரு பயம் விட்டது.

## 4

(இரண்டு வாரங்கள் சென்றுவிட்டன. பானு அந்த வாரப் பத்திரிகையைத் தூக்கிக்கொண்டு ஓடி வருகிறாள்.)

பானு: அண்ணா, அண்ணா! 'நளினி'க்கு முதல் பரிசு. இதைக் கேளு, மொத்தமே மூணு கதைகள்தான் வந்தனவாம்! அடுக்கு மொழியிலே போட்டி வைச்சா மூவாயிரம் கதைகள் வரும்னு நினைச்சுட்டா போலிருக்கு!

(ராகவன் ஆவலுடன் அதை வாங்கிப் பார்க்கிறான்.)

ராக: ஆகா! இதைப் பார். இது 'நளினி' என்ற பெயர் செஞ்ச வேலை மட்டுமில்லை. என்ன எழுதியிருக்கு, பாரேன். "கதையின் ஆரம்பமே மனத்தைக் கவர்கிறது. அடுக்கு மொழி தவறாமல் ஐந்து பக்கங்கள் வரக்கூடிய நீளத்துக்கு குமாரி நளினி கதை எழுதியிருப்பது போற்றத்தக்கது—

பானு: (திடுக்கிட்டு) என்ன அண்ணா! அப்படியே நின்னுட்டே! மேலே என்ன எழுதியிருக்கு? படியேன்.

(ராகவன் பேசாமல் நிற்கிறான். பானு 'வெல்லப் பா'கை வாங்கிப் படிக்கிறாள்.)

பர்னு: "முதல் பரிசு பெற்றிருக்கும் குமாரி நளினியை, எமது ஆசியுடன் இந்த வெள்ளிக்கிழமை எமது பத்திரிகாலயத்தில் நடக்கும் விழாவில் கலந்து கொண்டு



**மணி: ஏண்டா, பரீட்சையிலே நன்றாய் எழுதியிருக்கேன்னு சொன்னியே, ஏன் பாசாகவில்லே?**

**கிட்டு: நன்னா நிறுத்தி அழகா எழுதினாப் போறாதாம். கேள்விக்குப் பதில் எழுதணுமாண்டா!**

---

முதல் பரிசான லேடீஸ் சைக்கிளையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.''

ராக: போடீ, என் கண் முன் நிற்காதே. உன் யோசனையும் நீயும் நாசமாய்ப் போக! இப்ப எந்த மூஞ்சியுடன் நான் போய் லேடீஸ் சைக்கிளை வாங்கிக்கறது?

பானு: ஏன், நீயே நேரில் போய் நடந்ததைச் சொல்லி—

ராக: ''லேடீஸ் சைக்கிள் வேண்டாம். நல்லதா என் போன்ற ஆம்பிளைகளுக்கு ஏற்றதா ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுங்க''ன்னு கேட்கறதா? இதுக்கு முன்னே சொன்ன யோசனையைவிட இது இன்னும் மோசம்! இப்ப என்ன செய்யறது? சும்மாவாச் சொன்னார்கள், 'தையல் சொல் கேளேல்' அப்படின்னு?

பானு: (சிறிது யோசித்துவிட்டு) சரி, இதைக் கேள். இப்ப நீ ஒண்ணும் செய்யறத்துக்கில்லே. அதனாலே வெள்ளிக்கிழமை நான் போய் அந்தப் பரிசை உன் சார்பாக வாங்கிண்டு வரேன்.

ராக: (அழுகை எட்டிப் பார்க்கும் குரலில்) சிரமமெல்லாம் எனக்கு, புகழெல்லாம் உனக்கா? நடக்கறதையெல்லாம் பார்த்தால் முன்னாலேயே 'பிளான்' போட்டு நீ செய்த வேலையாட்டம்னா இருக்கு. இரண்டாவது பரிசான 'பார்க்கர்' பேனா வந்திருந்தாலும் நான் எழுதலாம். இப்ப 'லேடீஸ் சைக்கிள்' வந்தால் நீயல்லவா..

பானு: பயப்படாதே அண்ணா! அந்தச் சைக்கிள் எனக்கு வேண்டாம். அதை வித்துட்டு வேறு சைக்கிள் நீ வாங்கிக்கலாம். பரிசு வந்த சைக்கிளை விக்கலாமான்னு யோசிக்காதே! ஆனால், கல்யாணமாகியும் பிரம்மசாரி என்பதுபோல உன் கதைக்குப் பரிசு வந்தும் புகழ் இல்லை!

துண்: (வாசலிலிருந்து) ராகவா, ராகவா! அட ராக...

ராக: (வெளியில் வந்து, அதட்டலாக) என்னடா வேணும்?

துண்: என்னடா இது? உங்க வீட்டு விலாசம் எழுதி, யாரோ 'நளினி'ங்கறவளுக்குன்னா பரிசுன்னு போட்டிருக்கு? நீதானே கதை எழுதி அனுப்பினே?

ராக: ஏண்டா? என்ன கேக்கறது உனக்கு? நளினி யாராயிருந்தால் உனக்கு என்னடா? மொட்டைப் பயலே, உன் 'மரப்பட்டை'க்குக் கதை எழுதற மூளையை வச்சுண்டு கேள்வி கேட்க வந்துட்டியோ? மரியாதையாகப் போடா இங்கேயிருந்து!

(தன் அறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொள்கிறான்.)

[திரை]

பர்மியக் கதை

# தங்கச் சிறகு

'தம்பி'



ஓர் ஏழைக் குடியானவன் காட்டின் நடுவே குடிசை கட்டிக்கொண்டு வசித்துவந்தான். அவன் அண்ணன் ஒருவன் காட்டை அடுத்த நகரத்திலே பெரிய கடை வைத்துப் பெரும் செல்வத்துடன் வாழ்ந்து வந்தான்.

காட்டில் வாழ்ந்த தம்பி ஒரு நாள் காலையில் மரம் வெட்டச் சென்றான். வழியில் ஒரு மரத்தடியில் ஒரு கோழிச் சிறகு கிடந்ததைப் பார்த்தான். அது சாதாரணக் கோழிச் சிறகுபோல் இல்லை. சூரிய ஒளியில் பளபள என்று மின்னியது. அதை அவன் எடுத்து வைத்துக்கொண்டான்.


அன்று மாலை அவன் நகரத்துக்குச் சென்றான். அங்கே தன் அண்ணனைச் சந்தித்தான். காட்டில் எடுத்த சிறகை அவனிடம் கொடுத்தான். அதைப் பார்த்த அண்ணன் ஆச்சரியமடைந்தான். ஏனென்றால் அது சாதாரணமான சிறகு அல்ல; அது ஒரு தங்கச் சிறகு!

''தம்பி! இதை நான் வைத்துக் கொள்கிறேன். இதற்கு விலையாக செப்புக் காசு ஒன்று தருகிறேன். இதுபோல் எப்போது கிடைத்தாலும் கொண்டுவா. உனக்குக் காசு கொடுக்கிறேன்'' என்றான் அண்ணன். அவன் பேராசைக்காரன். அந்தச் சிறகு தங்கம் என்பதை அறியாத தம்பியும் சரி என்று செப்புக்காசை வாங்கிக்கொண்டு திரும்பினான்.

மறு நாள் காலையிலும் பொன் சிறகு ஒன்று கிடைத்தது. அதைத் தன் அண்ணனிடம் கொடுத்து, செப்புக்காசு வாங்கிக்கொண்டான். இப்படியே சில மாதங்கள் அவன் தினம் ஒரு தங்கச் சிறகைக் கண்டெடுத்து அண்ணனிடம் கொடுத்து வந்தான்.

தங்கச் சிறகு கிடைக்கும் மரத்தடியில் ஒரு நாள் அவன் ஒரு பொற்கோழியைப் பார்த்தான்.

## எவரெஸ்ட் வீரர்



**'உலகத்தின் உச்சி' என்று அழைக்கப்படும் இமயமலையிலுள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி வெற்றிக் கொடி நாட்டிய தீரர் ஷெர்பா டென்ஸிங்.**

போட்டோ: தம்புடு.

அது அவனிடம், "என்னை யாராவது கொன்று கறிசமைத்து என் இருதயத்தைத் தின்ருல் அவர்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கும். அவர்கள் படுக்கையில் தினம் காலையில் இரண்டு தங்க முட்டைகள் கிடைக்கும்" என்று சொல்லிற்று.

அதைக் கேட்ட அப்பாவித் தம்பி அன்று மாலை அண்ணனிடம் அந்த விஷயத்தைச் சொன்ஞன். உடனே அண்ணன், "தம்பி, நீ அந்தக் கோழியை என்னிடம் கொண்டு வா. உனக்கு ஆயிரம் பொன் தருகிறேன்" என்ருன்.

அதற்குத் தம்பி, "அண்ணு, எனக்குப் பொன்னும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். என்னுடைய பிள்ளைகள் இரண்டு பேர் கஷ்டப்படுகிருர்கள். அவர்களை நீ எடுத்து வளர்த்துப் படிக்கவைத்தால்போதும்" என்ருன்.

"அதற்கென்ன, நாளைக்கு அவர்களையும் அழைத்து வாயேன்" என்ருன் அண்ணன். உண்மையில் அவன் மனத்தில் தம்பியின் பிள்ளைகளை வளர்க்கும் எண்ணமே இல்லை. இந்த மட்டும் பணச்செலவில்லாமல் அதிசயக் கோழி கிடைக்கிறதே என்று அவன் சந்தோஷப்பட்டான்.

மறு நாள் அதிசயக் கோழியையும் தன் பிள்ளைகளையும் தம்பி அழைத்துவந்து அண்ணனிடம் விட்டான். தம்பியின் தலை மறைந்ததும் அண்ணன் அந்தப் பிள்ளைகளிடம், "ஏ தடிச் சோம்பேறிகளா! ஏன் சும்மா நிற்கிறீர்கள்? இந்தக் கோழியை உள்ளே எடுத்துக்கொண்டு போங்கள். அதைக் கொன்று கறி சமைத்து வையுங்கள், சீக்கிரம்" என்று விரட்டினன்.

பாவம், அந்தச் சிறுவர்கள் நடுங்கியபடி தங்கள் பெரியப்பா சொன்னபடி செய்தார்கள். கோழிக் கறியை நறுக்கி அடுப்பில் வேகவைத்தபோது அதன் இருதய பாகம் தவறிப்போய் தரையில் விழுந்துவிட்டது. அந்த இறைச்சி அழுக்காகிவிட்டதால் பெரியப்பா கோபிப்பாரோ என்று பயந்து அந்தப் பிள்ளைகள் இருவரும் அதை ஆளுக்குப் பாதி தின்றுவிட்டார்கள்.

அண்ணன் சாப்பிட வந்தான். கோழி இறைச்சியில் இருதயத்தைக் காணவில்லை! அதுவல்லவா அவனுக்கு முக்கியம்? பிள்ளைகளை விசாரித்தான். அவர்கள் நடந்ததைச் சொல்லிவிட்டார்கள். அவன் மிகவும் கோபமடைந்து அந்தச் சிறுவர்களை அடித்து, தன் வீட்டை விட்டுத் துரத்திவிட்டான்.



சிறுவர்கள் இருவரும் தங்கள் காட்டுக் குடிசைக்குச் சென்றார்கள். மறுநாள் காலையில் அவர்கள் ஒவ்வொருவர் படுக்கையிலும் ஒரு தங்கக் கோழி முட்டை இருந்தது. அவர்கள் இரண்டுபேருமே அதிசயக் கோழியின் இருதயத்தைத் தின்றவர்கள் அல்லவா?

இந்தத் தடவை காட்டிலிருந்த தம்பி, தங்க முட்டையை விற்கத் தன் அண்ணனைத் தேடிப் போகவில்லை. தன் பிள்ளைகளை அண்ணன் அடித்துத் துரத்தியதால் அவனுக்குக் கோபம். ஆகவே நகரத்திலிருந்த வேறொரு வியாபாரியிடம் அந்த முட்டைகளைக் கொண்டு கொடுத்தான். அந்த வியாபாரி நாணயமானவன். தங்க முட்டைகளுக்குப் பெறுமானம் உள்ள பொன் நாணயங்களைத் தம்பிக்குத் தந்தான்.

அப்போதுதான் தம்பிக்குத் தன் அண்ணனின் வஞ்சகம் எல்லாம் புரிந்தது. நாளடைவில் அவன் பிள்ளைக்குக் கிடைத்த தங்க முட்டைகள் மூலம் அவன் பெரிய பணக்காரனாகி விட்டான். அண்ணனைவிட அதிகச் செல்வத்தோடும் சிறப்போடும் வாழ்ந்தான்.


# பெருமைக்காரர்

## என். நடராஜன்

குப்புசாமியின் மாமா பெரிய பணக்காரர். பெரிய பெரிய பதவிகளெல்லாம் வகிப்பவர். பிரபல வியாபாரி. மிகவும் தற்பெருமைக்காரர். சதா தம்மைப் பற்றியே பெருமையடித்துக்கொள்வார். இது பணக்காரர்களுக்கே சகஜந்தான் என்றாலும் அவர் பெருமையடித்துக்கொள்வது அளவுக்கு மீறியிருக்கும். கேட்பவர்களுக்கு வெறுப்புத் தட்டினாலுங்கூடப் பணக்காரர் என்ற காரணத்தால் 'சிவனே' என்று கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

இன்னாரிடம்தான் தன் பெருமையை அளப்பது என்ற கணக்கே அவருக்குக் கிடையாது. தலையை ஆட்டி 'ஊம்' கொட்டுபவர்கள்கிடைத்தால் போதும்; மணிக்கணக்காகப் பேசுவார். தமக்குப் பிறர் எப்படி மரியாதை காட்டுகிறார்கள்; தம்மைக் கண்டால் பிறர் எப்படிப் பயப்படுகிறார்கள் என்பதைச் சலிக்காமல் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பார். ஏன், குப்புசாமியிடமே எவ்வளவோ தடவை சொல்லியிருக்கிறார். அவனும் இதையெல்லாம் வாயைப் பிளந்துகொண்டு கேட்டுக்கொண்டிருப்பான்.

மாமாவுக்கு ஒரு தரம் திருச்சிக்குப் போக வேண்டிய வேலையிருந்தது. பள்ளிக்கூடம்



திறந்துவிட்டபடியால் குப்புவும் ஊருக்குப் போகவேண்டி யிருந்தது.

"எலே! நான் திருச்சி போகும்போது, உன்னையும் ஊரில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். என்கூட வரலாம்" என்றார் மாமா.

"சரி, மாமா" என்றான் சந்தோஷத்துடன் குப்புசாமி. மாமாவுடன் மெத்தை தைத்த இரண்டாம் வகுப்பு வண்டியில் ஜோராகப் போகலாம் என்று அவனுக்குத் தெரியும்.



மறுநாள் குப்பு, மாமாவுடன் குஷியாக ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான். மாமா இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுகளுடன் வந்து சேர்ந்தார்.

"ஏய்! குப்பு, வீட்டிலே கட்டிலில் தூங்குவதைப்போல் நிம்மதியாகத் தூங்கலாம். வேறு யாரும் நம் வண்டியில் ஏறாமல் ஏற்பாடு செய்கிறேன். மாமாவின் செல்வாக்கைப் பார்" என்று பெருமையாகக் கூறினார் மாமா.

மாமா அடிக்கடி ரெயில் பிரயாணம் செய்பவர். அநேகமாக எல்லோரையும் தெரியும். அந்த ரெயில் வண்டியின் 'கார்டை'க் கூப்பிட்டார் மாமா. 'கார்டு' கருணாநிதியும் மரியாதையுடன் வந்து நின்றார்.

"என்ன மிஸ்டர் கருணாநிதி, திருச்சிக்குப் போகிறேன். திருச்சி வரும்வரையில் என் கம்பார்ட்மெண்டிலே யாரும் ஏறாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும், தெரிந்ததா?" என்று சொன்னார்

"நீங்கள் கவலையே கொள்ள வேண்டாம். ஒருபிள்ளைப் பூச்சி கூட ஏறிவிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள்" என்று கூறிவிட்டுத்

தன் கையை வீசிக்கொண்டு போனார் கருணாநிதி.

குப்புவும் அவன் மாமாவும் வண்டியில் ஏறிப்படுத்துக்கொண்டனர்.

நடுநிசி இருக்கும். குப்புவும் அவன் மாமாவும் ஏறியிருந்த வண்டிக்கு வெளியே ஏகக் கூச்சல் கேட்டது. குப்புவும் மாமாவும் விழித்துக்கொண்டு விட்டனர். வெளியே பலர் கலாட்டா செய்யும் சப்தம் உள்ளே தெளிவாகக் கேட்டது. அது விழுப்புரம் ஸ்டேஷன்!

"என்னய்யா, வண்டி பூராவும் ரிசர்வா பண்ணியிருக்கீங்க! நாங்களும் இரண்டாம் வகுப்பு டிக்கட்டுத்தான் வாங்கியிருக்கிறோம். இந்த வண்டியில்தான் ஏறப்போகிறோம். நீ தடுக்க முடியாது" என்று பல குரல்கள் கத்திக்கொண் டிருந்தன. 'கார்டு' கருணாநிதி ஏதோ பதில் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் வண்டி புறப்படும்வரையில் யாரும் ஏற வில்லை. மறுபடி மாமாவும் குப்புவும் நன்றாகத் தூங்கினர்.

காலையில் திருச்சியில் வந்து வண்டி நின்றது. மாமா தடபுடலாக இறங்கினார். குறுக்கே 'கார்டு' கருணாநிதி வேகமாகச் செல்வதைக் கண்ட மாமா கை தட்டிக் கூப்பிட்டார்.

"ரொம்ப தாங்ஸ், கருணாநிதி!" என்றார் மாமா.

"ஹி....ஹி...." என்றார் கருணாநிதி.

"அது சரி, விழுப்புரத்திலே எங்கள் வண்டியில்தான் ஏறுவேன் என்று யாரோ காட்டுமிராண்டிகள் கலாட்டா பண்ணினார்களே, எப்படி விரட்டினீர்?" என்று நன்றியுடன் விசாரித்தார் மாமா.

"அதெல்லாம் எனக்குச் சொல்லியா கொடுக்கவேண்டும்? பழம் தின்று கொட்டை போட்டவனாச்சே. நீங்கள் நிம்மதியாகத் தூங்கினீர்களா?" என்று மழுப்பினார் 'கார்டு'.

"அவர்களை எப்படித் தடுத்தீர்கள். ரொம்பச் சிரமமோ?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. முதலில் கலாட்டாதான் செய்தார்கள். ஸ்டேஷன் மாஸ்டரிடம் போய் ரிப்போர்ட் செய்வோம் என்றுகூடப் பயமுறுத்தினார்கள். ஒரே வார்த்தையில் ஒடும்படி செய்துவிட்டேன்" என்று பெருமையுடன் கூறினார் கார்டு.

"அப்படி ஓடும்படி என்ன சொன்னீர் ஐயா?...." என்று தமாஷாகச் சிரித்துக்கொண்டே கேட்டார் மாமா.

"ஒன்றுமில்லை. 'வண்டிக்குள்ளே இருக்கிறாரே, அவருக்குக் கொஞ்சம் மூளைக் கோளாறு. நேரே கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறார். பரவாயில்லை என்றால் ஏறிக்கொள்ளுங்கள்' என்றேன். அவ்வளவுதான்; அத்தனை பேரும் ஒரே ஓட்டம்.." என்று சொல்லிக்கொண்டே போனார் 'கார்டு' கருணாநிதி.

மாமா பிரமித்துப்போய் நின்று விட்டார். பிரகாசமாக இருந்த அவர் முகம் 'டக்'கென்று மாறியது. பெருமை காற்றில் பறக்கவே, 'கார்டு' கருணாநிதியின்மேல் தாங்கமுடியாத கோபம் வந்தது. முகம் படபடக்கத் திரும்பினார் மாமா.

அவர் முகத்தைப் பார்த்த கருணாநிதிக்கு அங்கே நிற்கப் பைத்தியமா என்ன?

# ஏமாந்தது யார் ?

**என். ஸ்ரீநிவாஸன்**

எங்கள் வண்டியில் அப்போது தான் டிக்கெட் பரிசோதகர் ஏறியிருந்தார். உடனே அவர் சுறுசுறுப்பாக டிக்கெட்டை வாங்கி அதன் பின்பக்கம் கையெழுத்திட்டுக் கொடுத்துக் கொண்டே வந்தார். நானும் டிக்கெட்டைக் கையிலெடுத்துக் கொடுத்தேன். அவர் அதில் கையெழுத்திட்டுக் கொடுத்தார். உடனே எனக்குப் பக்கத்திலிருந்தவர் டிக்கெட்டைக் கொடுத்தார். அதில் முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்தார் பரிசோதகர். பிறகு அந்தக் கிழவரிடம், ''இந்த டிக்கெட்டை எப்பொழுது வாங்கினீர்கள்?'' என்று கேட்டார். பாவம், அவர் காதில் விழவில்லை. ''தஞ்சாவூர் போகிறேன்'' என்றார்.

''அது சரி; இதை என்று வாங்கினீர்கள்?'' என்றார் உரக்க.

''என்? இன்றுதான்?''

''எங்கே வாங்கினீர்கள்?''

''சிதம்பரத்திலே.''

''யார் கொடுத்தார்கள் இதை?''

''நான் சிதம்பரம் ஸ்டேஷனுக்கு வரும்போது வண்டி கிளம்பத் தயாராக இருந்தது. நான் டிக்கெட் வாங்கப் போறப்பேர ஓர் ஆள் வந்து, 'சார், நீங்க எங்கே போறீங்க?' என்றான். நான், 'தஞ்சாவூர்' என்றேன். அப்போது அவன், 'சார், சார், நானும் தஞ்சாவூர் போகத்தான் டிக்கெட் வாங்கினேன். ஆனால் தஞ்சாவூரிலே நான் பார்க்க வேண்டிய ஆசாமி போன வண்டியிலே வந்து இறங்கினார். ஆகையால், இந்த டிக்கெட் வீணாகப் போறது. நீங்க பாதிவிலை கொடுத்தால் போதும்' என்றான். அது தான் சார், இது'' என்றார் கிழவர்.

''சரி; போனாப் போறது. உங்களுக்கு அபராதம் எதுவும் போடல்லே. டிக்கெட் சார்ஜை மட்டும் கொடுங்கள்'' என்று வசூலித்துக்கொண்டு போய் விட்டார், அந்தக் காருண்ய மனிதர்.

* * *

தஞ்சாவூர் வந்தது. நாங்கள் இறங்கினோம். அந்தக் கிழவரும் இறங்கினார். உடனே அவர் தம் கூட வந்தவரிடம் (நண்பரோ, உறவோ தெரியாது), ''நல்ல வேளை, பழைய டிக்கெட் இது. இல்லாவிட்டால் என் கதை பொய் என்று நிரூபிக்கப்பட்டிருக்கும்'' என்றார் அவர். அவரோடுவந்தவர், ''இல்லாவிட்டால் நாம் கிளம்பிய இடமான கடலூரிலிருந்தே பணம் கட்ட வேண்டியிருக்கும்'' என்றார். எனக்கு இதைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது.

# மகா யோக்கியன்!

தங்கமணி

அந்தி வேளை.

மரகதச் செடிகள் பூத்துக் குலுங்கின. சூரியன் சிவந்து பிரகாசித்தான், கிளியின் மூக்கைப் போல், செந்தாமரைப் பூவைப்போல்.

அங்கே ஒரு காடு. காட்டின் நடுவிலே ஒரு குன்று. குன்றின் அடிவாரத்திலே ஒரு குளம். குளத்தின் அருகே ஒரு புதர். கல்லும் முள்ளும் - புல்லும் பூண்டும் - செடியும் கொடியும்- படர்ந்து அடர்ந்து மண்டிய பெரும் புதர். அந்தப் புதருக்குள்ளே....




ஒரு புலி! பயங்கரமான புலி! புதரோடு புதராக - தரையோடு தரையாக - சந்தடி பண்ணமல் சுருண்டு, முடங்கிப் பதுங்கிக் கொண்டிருந்தது அது! அதற்கு, நான்கு நாட்களாக ஒரு துளி இரையும் அகப்படவில்லை. அதுவும் எங்கெங்கோ அலைந்தது. திரிந்தது; ஒரு பலனும் ஏற்படவில்லை.

புலிக்குப் பசி! அகோரமான பசி!

சற்று நேரமாயிற்று.

பாவம்! ஆம்; பாவந்தான்!..

எங்கிருந்தோ, ஒரு புள்ளி மான்—சின்னஞ் சிறு மான்—சித்திரகாரரின் உள்ளத்தைக் கவர்ந்து மயக்கும் சிங்கார மான் - வந்தது! அது, துள்ளித் துள்ளி வந்தது; தாவித் தாவி வந்தது; குதித்துக் குதித்து ஓடி ஓடி வந்து, குளக்கரையில் நின்றது. அது எங்கெங்கே அலைந்ததோ! எவ்வளவு நேரம் திரிந்ததோ! அதற்கு ஒரே தாகம்! அது, குளத்தில் இறங்கியது. முழங்கால் அளவு நீரில் போய் நின்று, ஒரு தடவை கழுத்தை உயர்த்தித் திருப்பித் திருப்பிச் சுற்று முற்றும் பார்த்தது.

எங்கும் அமைதி! பயங்கரமான அமைதி! கொடிய சூறுவளிக்கு முன்னே நிலவும் கோரமான அமைதிபோல!

நீர் அருந்தக் கழுத்தைத் தாழ்த்தியது புள்ளி மான்.

மறு நொடியிலே—ஆ!..

குபீரென்று கிளம்பிப் பாய்ந்தது, பசிவெறி பிடித்த புதர்ப் புலி! அந்த ஒய்யாரப் புள்ளி மானின் தொண்டையில் ஒரு கவளம் நீர் பட்டதோ, தொட்டதோ! அதன் பட்டுப் போன்ற மிருதுவான கழுத்தை..

ஐயோ, பாவம்!

மானைக் கவ்வியது புலி; கடித்தது; குதறியது; கிழித்தது..

அந்தச் சமயத்திலே, அந்த இடத்திற்கு ஒரு சிறு நரி வந்தது. அதற்கும் பசி. கொடிய பசி. அது, குளக்கரையில் நடக்கும் கொலைக் காட்சியைக் கண்டதும் நின்றது. அதன் நெஞ்சிலே ஓர் எண்ணம் நெளிந்தது.

‘ஏதேனும் மிச்சம் மீதி கிடைக்காதா?’—நரியின் உலர்ந்த நாக்கில் நீர் சுரந்தது. ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தது.

‘எதிர்பார்ப்பவன் நிச்சயம் ஏமாறுவான்’ என்ற சிந்தனை வாக்கு எவ்வளவு உண்மையானது!

அந்தக் கொடிய புலி,பெரிய ஏப்பம் விட்டுக்கொண்டு, அங்கிருந்து மெல்ல நடந்தது. அருகிலுள்ள ஒரு மரத்தடிக்குச் சென்றது. சுகமாய்ப் படுத்துக்கொண்டு ரத்தக் கறைபடிந்த முன்னங் கால்களை நாக்கினால் நக்கி நக்கிச் சுத்தப் படுத்திக்கொள்ள ஆரம்பித்தது.

அதன் பிறகு, எதிர்பார்த்துக்



கிடந்த நரி, 'ஏதேனும் மீதியிருக்குமோ..?' என்று ஓடோடி வந்தது. குளக்கரையில் வந்து அங்கும் இங்கும் பார்த்தது.

அங்கே—முழுசாக ஒரு மான், அப்படியே..சுவாஹா!

எகிறிக் குதித்தோடி வந்த நரி ஏமாந்து ஏங்கி நின்று விழித்தது. பசி வேதனை உயிரை உருட்டியது.

திடீரென்று—

தும்பைப் பூவைப் போன்று வெள்ளை வெளேர் என்ற ஓர் அழகிய முயல் குட்டி, சற்றுத் தொலைவிலிருந்து ஓடி வந்தது. குளத்தங்கரையை நோக்கி, துள்ளித் துள்ளி, தாவித் தாவி, குதித்துக் குதித்து ஓடோடி வந்தது; நின்றது. முன்னங் கால்களைத் தூக்கி, பின்னங்கால்களால் நின்று கொண்டு, தன் கண்ணுடி விழிகளை உருட்டி உருட்டிச் சுற்றுமுற்றும் பார்த்தது.

அடுத்த கணம்..!

குப்பென்று பின்னுலிருந்து கிளம்பிப் பாய்ந்த நரி, முயல் குட்டியின் பூங்கழுத்தைக் கப் என்று கவ்வியது!

மறுவிநாடி-"அடேய்! விடடா, அதை!.." என்று ஓர் அதட்டல் கர்ச்சனை கிடுகிடாய்த்தது!

நரி திடுக்கிட்டது; நடுங்கியது; திகைத்துப் பிரமித்தது. கவ்வியிருந்த முயல் குட்டியை வாய் நழுவ விட்டு விட்டு, மெல்லத் திரும்பிப் பார்த்தது.

உயிர் மீண்ட முயல் குட்டி, உடனே நீட்டியது கம்பி.

மரத்தடியிலிருந்து மெல்ல எழுந்து நின்றது புலி. 'ஆவ்!..' என்று நெடிய ஏப்பம் விட்டது. முன்னங் கால்களை நீட்டியது; உடலை வளைத்தது; முறுக்கியது. 'உஹ்ஹூஊஹூஊ!..' என்ற ஒரு பெரும் கர்ச்சனையோடு சோம்பல் முறித்துக் கொண்டது. பிறகு, சாவதானமாக, திருட்டு விழி விழித்து நிற்கும் நரியை வெறித்துப் பார்த்தது; பார்த்துக் கொண்டே கூறியது:

"அடே! அது உனக்கு எம் மாத்திரம்? உம்!..அந்தச் சிறு ஜீவனிடம் போய் உன் கைவரிசையைக் காட்டுகிருயே, அறிவில்லை? ஏமாந்தவன் அகப்பட்டால் போதும். சுருட்டி விழுங்க வேண்டியதுதான்! இரக்கமற்ற அரக்க ஜன்மமே! ஓடிப்போ, இங்கிருந்து!.." என்று சொல்லிக் குகையை நோக்கி நடை போட்டது, புலி!

நரி திகைத்தது. இரண்டொரு விநாடிகள் வரை என்னவோ யோசித்தது; பிறகு, அப்படியும் இப்படியுமாய்த் தலையை ஆட்டிக் கொண்டே செல்லும் புலியைப் பார்த்து அது ஊளையிட ஆரம்பித்தது:

"ஹூஊம்!—இவன் மகா யோக்கியன்! 'படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்!' என்று மனிதர்கள் சொல்வது போலத்தானே இருக்கிறது, இந்தப் பயலின் கதையும். அயோக்கியன்!"

உள்ளம் வெம்பிய நரி, ஓயாமல் வசைப் பாட்டுப் பாடியது.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

V. 343. வேலாயுதம், S. K., சங்கரன்கோவில். 344. வைதீஸ்வரன், S. G., குகளூர். 345. வெங்டாசலம், S., பாலசுப்பிரமணியன் S., டோம்பிலி, 346. வெங்கடசுப்பு, T. G., மதுரை. 347. வைதேகி, G., சந்தானம். 348. வேங்கடராமன், M. N., சென்னை-17. 349. விச்சன், H. Y., புதூர். 350. வெள்ளையப்பன், C., கண்டி. 351. வெங்கடாசலம், P., ஜலகண்டபுரம். 352. அப்ரஹாம் வாஸர்., ஸ்ரீவைகுண்டம். 353. விசுவநாதன், S., மோகனூர். 354. வேங்கடராமன் S., தண்டபாணி, சென்னை-4. 355. வெங்கடேசன்., கொடுமுடி. 356. விசுவநாதன், P. R., மணி, A. S., சென்னை-18. 357. வாஸன், R. V., ராசிபுரம். 358, விசுவநாதன். P., அவிநாசி. 359. வீராகவன், R., கல்கத்தா-26. 362. வரதராஜுலு, V. S., வெள்ளாலகுண்டம். 363. வஸந்தமணி, R. P., குப்பத்தூர். 364. வேங்கடராமன், A. R., கரூர். 365. விஜயலட்சுமி, R., பால்குளும். 366. வாழவந்தாள், K., மதுரை. 367. வீரப்பன், S., புதவயல். 368. வேலாயுதம், S. R., 369. வேங்கடராமன், P. S., சேலம். 370. விசுவநாதன், N., பங்களூர். 372. விசுவநாதன், G., பூமனூர். 374. வேங்கடராமன், சாரதாம்பாள், V. S., விழுப்புரம். 375. விக்டர் ஜெய்ராஜ், P., தநுஷ்கோடி. 376. வெங்கடலட்சுமி, V. R., கோயில்பட்டி. 377. வேங்கடராமன், கோபாலன், ஜயராமன், C. R., விழுப்புரம். 378. வெங்கடாசலம், C., சென்னை-2. 379. 380. வீரமணி, H., பாதை. 381. விஜயலட்சுமி, வெங்கடலட்சுமி., புதுக்கோட்டை. 382. வேங்கடராவ், கொல்லம். 385. வெங்கடாஜலபதி, N., பழனி. 386. விஜயா, S., சென்ணை-17. 387. வஸந்தா. S., மதுரை. 388. வெங்கடேசன், N., திருச்சி. 389. வாசுதேவன், G., ஜகந்நாதன், சென்னை-5. 390. வஸந்தகுமாரன், P., கோயம்புத்தூர். 391. வேங்கடராமன், S.,

இங்கே கத்தரிக்கவும்

## கண்ணன் கழகம்

### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ..........................

விலாசம் ..........................

..........................

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

ஏப்ரல், 15-'54 கூபன் நெ:

சென்னை-4. 392. வெள்ளிங்கிரி, S., கோயம்புத்தூர். 393. வேலு சாமி, R., பாலாப்பட்டி. 394. வள்ளி, K. A., ராமசந்திரன். K. A., சென்னை-11. 395. வேங்கடராகவன். R., முகுந்த ராமபுரம். 396. வரதராஜன், V. D., கோயம்புத்தூர். 397. வனஜா, தாமோதரம், பக்த வத்ஸலம், கருங்கல்பாளையம். 398. வேங்கடாச்சாரி, S., சென்னை-4. 399. வாசுதேவன், G. V., சேலம் டவுன். 400. விஜயம், N. V., பங்களூர்.

Y. 9. யோகம் N; தாரமங் கலம். 10 யாகூப். A.M., ஆம்பூர். 11. யாகப்பன் A. P. L. S. P., வளையாப்பட்டி.

A. 300. அன்வர்பாஷா V.M.N., கீழக்கரை. 301. அன்னியம்மா, C., ஆரோக்கியவரம். 302. அன்வர்பாஷா G., திருச்சி. 303. ஆமீர் பாஷா, K. G., திருச்சி. 304. அனந்தராஜா B., கொழும்பு 14. 305. அப்துல் ஹகீம், M. S., அம்மாப்பேட்டை. 306. அப்துல் காதர், M. A., கொழும்பு. 307. அருணசலம், P., சென்னை - 1. 308. ஆசீர்வாதம், V. S., கடையநல்லூர். 309. அண்ணமலை, நாகப்பன், P. R., புதுக்கோட்டை. 310. அம்பல வாணன், S., அருணசலம், ரத்னம், வெல்லம்பாளையம். 311. அன்பரசு, D., குறிஞ்சிப்பாடி. 312. அன்வர்டீன், K.M., மணப்பாறை. 313. ஆனந்து, நவரோஜா, A. J., மன்னார்குடி. 314. அப்துல்ஜாவர், T. M., கோயம்புத்தூர். 315. அமிர்தலிங்கம், செம்பாக்கம் 316. அமர்நாத், A. S., புதுச்சேரி. 317. அன்சாரி, M. T., கோட்டை. 318. அமிர்த வாசகம், P.N.R., யாழ்ப்பாணம். 319. அப்துல் காதர், N. M., கண்டி. 320. அண்ணமலை T., (ஊர் எழுதவில்லை.) 321. அப்துல் ஜாவர், S., கொடுவாயூர். 322. அப்துல் சலாம் M. A., யாழ்ப்பாணம். 323. அருணசலம், S; ஆனந்தபுரம், 324. அரங்கராஜன், M., உப்பிலியபுரம். 325. அப்துல் கபூர், ஆயர்பாடி. 326. ஆறுமுகம், M., கும்பகோணம். 327. அபிஷேகம், ராஜேஸ்வரி, சீனிவாசன்; சென்னை-4. 328. அன்னபூர்ண, H., சமூகரங்கபுரம். 329. அனந்தநாராயணன் K., சேஷாத்திரி, ரேவதி., சென்னை-14. 330. ஆறுமுகம் T., யாழ்ப்பாணம். 331. அருணசலம், V., சீகாழி.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

# கண்ணன்

## கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

**[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. 'ஒற்றையா? இரட்டையா?' என்ற கேள்விக்குப் பதில் சொல்லுவது போல் இரண்டொரு வார்த்தைகளில் பதில் சொல்லிவிட முடியும். அப்படிச் சொன்னால், பரீட்சையில் மார்க்கு வரலாம்; ஆனால் படிக்கும்போது சுவை உண்டாகாது; தெளிவும் உண்டாகாது. உங்களைவெறுமே சிரிக்கச் செய்ய வேண்டும் என்று விடை சொன்னால், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன்படவும் வேண்டும், உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம்.**

**ஆ—ர்]**

**கண்ணன், சென்னை-4. வயது 10.**

எங்கள் வீட்டில் கண்ணடித் தொட்டியில் மீன் வளர்க்கிறோம். நாங்கள் முதலில் அதில் இரண்டு மீனை விட்டிருந்தோம். இப்போது அதில் பத்து மீன்கள் ஆகிவிட்டன. "மீன் குட்டி போட்டிருக்கிறது" என்றாள் என் தங்கை. "மீன் குட்டி போடாது; முட்டை தான் இடும்" என்றேன் நான். யார் சொன்னது சரி?

**பொ**துவாகப் பார்த்தால், நீ சொன்னதுதான் சரி. மீன்களில் எத்தனையோ ஆயிரம் வகைகள் இருக்கின்றன. அவைகளில் சில வகை மீன்கள்தான் குட்டி போடும். மற்றெல்லா வகை மீன்களும் முட்டைகளைத்தான் இடும். உதாரணமாக, சிலவகைச் சுறா மீன்கள் முட்டை இடுவதில்லை; அவைகள் குட்டி போடுகின்றன என்று சொல்லலாம். ஆனால், இளம் மீனை 'மீன் குட்டி' என்று சொல்வதில்லை. மீன் குஞ்சு என்று சொல்வதுதான் மரபு.

சாதாரணமாக, ஒவ்வொரு பெண் மீனும் ஆயிரக் கணக்கான முட்டைகளை இடுகிறது. ஆனால் நல்லவேளையாக, அந்த முட்டைகள் எல்லாம் குஞ்சு பொரிப்பதில்லை. சில முட்டைகள் மட்டுமே முதிர்ந்து, குஞ்சு பொரிக்கின்றன. பல முட்டைகள் மற்ற மீன்களுக்கும் நீரில் வாழும் மற்றப் பிராணிகளுக்கும் இரையாகி, அழிந்து போகின்றன; அல்லது, வேறு வகையாகச் சேதப்படுகின்றன.

உங்கள் வீட்டு மீன் இட்ட முட்டைகளில் பெரும் பகுதி அழிந்து போயிருக்க வேண்டும். ஆகையால்தான் உங்கள் மீன் தொட்டியில் பத்து மீன்கள் இருக்கின்றன. அந்த மீன் இட்ட எல்லா முட்டைகளும் குஞ்சு பொரித்திருந்தால் உங்கள் தொட்டி மட்டும் இல்லை, அந்தத்

தொட்டி வைத்திருக்கும் அறை முழுதுமே மீன்களால் நிறைந்திருக்கும்.

**சோமசுந்தரம், முல்லைவனம். வயது 11.**

உலகத்திலே மிகவும் ஆழமான ஏரி எது?

**ம**ங்கோலியாவுக்குச் சற்று வடக்கே, சைபீரியாவில் உள்ள பைக்கல் ஏரியே உலகத்திலுள்ள ஏரிகள் எல்லாவற்றிலும் மிகவும் ஆழமானது. அது ஓரிடத்தில் 5712 அடி ஆழமுள்ளதாக இருக்கிறது.

**ஹனீபா, பண்டாரவாடை. வயது 14.**

உலகத்திலே மிகவும் அதிகமாக மழை பெய்யும் இடம் எது?

**ஹா**வாய்த் தீவில், கடல் மட்டத்துக்குமேல் 5,500 அடி உயரத்தில் உள்ள வையலீலே என்னும் இடத்தில் வருஷத்தில் சராசரியாக 580 அங்குலம் மழை பெய்கிறது. இதற்கு அடுத்தபடியாகச் சொல்லக் கூடியது அஸ்ஸாம் நாட்டில் உள்ள செரபுஞ்சி என்னும் இடம். அங்கே வருஷத்தில் சராசரியாக 500 அங்குலத்துக்குக் குறையாமல் மழை பெய்கிறது.

ஆனால், இந்த இரண்டு இடங்களிலும் மழைக் காலத்தில்தான் மழை கொட்டுகிறது. மற்றக் காலங்களில் அவ்வளவு மழை பெய்வதில்லை. பசிபிக் மகாசமுத்திரத்தில் உள்ள மார்ஷெல் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஜல்யூட் தீவுகளில் வருஷத்தில் சராசரியாக முப்பது நாள் போக பாக்கி 335 நாளும் மழை பெய்கிறது.

**அருணா, காந்திநகர். வயது 8.**

நடுப் பகலில் வெயில் கடுமையாக இருக்கிறது. காலையிலும் மாலையிலும் அவ்வளவு கடுமையாக இல்லை. நடுப்பகலில் சூரியன் கிட்ட வந்து விடுகிறதா?

**இ**ல்லை. சூரியன் காலை, நடுப்பகல், மாலை ஆகிய எல்லா வேளைகளிலும் ஒரே தூரத்தில்தான் இருக்கிறது. சூரியன் வானத்தின் அடியிலிருந்து மேலே ஏறிக் கீழே இறங்குவது போல் தோன்றுகிறது.

சூரிய கிரணங்கள் அதைக் கடந்துதான் நம்மை வந்து அடைகின்றன. அப்படி அவை வரும்போது, அவைகளில் ஒரு பகுதியை வழியிலுள்ள வாயு மண்டலம் தடுக்கிறது.

நடுப் பகலில் சூரிய கிரணங்கள் வாயு மண்டலத்தின் ஊடே நேராகச் செல்லும் தூரத்தைவிட, காலையிலும் மாலையிலும் அவை வாயுமண்டலத்தின் ஊடே சாய்வாகச் செல்வதால் அதிகத் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அப்போது வாயுமண்டலம் அந்தக் கிரணங்களின் வெப்பத்தை அதிகமாகத் தடை செய்கிறது. ஆகையால்தான் காலையிலும் மாலையிலும் வெப்பம் குறைவாகவும், நடுப்பகலில் வெப்பம் அதிகமாகவும் இருக்கிறது.

**V. ராம், திருப்பூர், வயது 10.**

தக்காளிப் பழத்தைத் பச்சையாகத் தின்பது நல்லதா?


**வே**கவைத்துச் சாப்பிடுவதைவிடப் பச்சையாக சாப்பிடுவதே சிறந்தது.



# அசட்டுப் பிச்சு

ஆர்வி

மண்டிக்கடை ஐயாசாமியின் முகத்தில் எள்ளும் கொள்ளுமாக வெடித்துக்கொண்டிருந்தது. முதலில் அவர் பிச்சுவைக் கவனிக்கவில்லை. பிச்சுவின் நண்பர்கள் எல்லாம் ஆவல் மிகுதியினுல் மூலைக்கு ஒருவராக ஊர் முழுவதும் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஐயாசாமி வந்த சமயத்தில் பின்னுல் பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த்தும் வந்துகொண்டிருந்தான். அவன் ஐயாசாமியைப் பார்த்து, ''ஸார், ஸார்! உங்க பையன் அதோ வருகிருன், ஸார்!'' என்று பீப்பாய் உருண்டு வருவது போல ஓடி வந்தான்.



ஐயாசாமி, ''பிச்சு!'' என்று ஒரே ஆங்காரத்துடன் தாவி வந்தார். ''ஏண்டா, எங்கேடா போனே? எப்போடா போனே? வீட்டுக்கு நேரே வரதுக்கு என்னடா உனக்கு?'' என்று சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தார். நாசுக்குத் தெரியாமல் அவர் நடுத்தெருவிலேயே சத்தம்போட ஆரம்பித்ததும் பிச்சுவுக்கு ஒரே அவமானமாக இருந்தது. பிச்சு வந்திருக்கிருன் என்று தெரிந்ததும் தெருவில் போவோர் வருவோரெல்லாம் கூட்டம் கூடத் தொடங்கினுர்கள். பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்துக்கு உற்சாகம்



பொங்கி வழிந்தது. சற்று நேரத்தில் கீச்சு மூச்சுலோகு, மாணிக்கம், குடுமி வைத்தி முதலிய நண்பர்களும் வந்து கூடிவிட்டார்கள். இடம், சந்தர்ப்பம் தெரியாமல் அப்பா எதாவது மேலும் சத்தம் போடப் போகிறாரே என்று பிச்சுவுக்கு மிகவும் கவலையாக இருந்தது. அவன் உடனே பேச்சை மாற்றுவதற்காகப் பிரிஞ்ஜாலைப் பார்த்து, "உன் காரியமாகத்தான் அவசரமாகப் போயிருந்தேன். உன்னுடைய அப்பாவை உடனே நான் கொஞ்சம் பார்க்க வேண்டுமே!" என்றான்.

ஐயாசாமிக்குக் கூடக் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. அவருடைய வேகம் சிறிது தணிந்தது. அவர் கையில் இருந்த கவர் ஒன்று இப்போது மெதுவாக நழுவிக் கீழே விழுந்தது.

"என்ன அப்பா கவர் இது?" என்று பிச்சு குனிந்து அதை எடுத்தான்.

"எல்லாம் நீயே பாரு. நீ பரீக்ஷையிலே பண்ணியிருக்கிற லட்சணத்தை!" என்று சொன்னார் ஐயாசாமி. பிச்சுவுக்கும் திக்திக்கென்றுதான் இருந்தது. 'ரிசல்ட் என்ன ஆச்சோ? அப்பா இருக்கிற இருப்பைப் பார்த்தால் பயமாக இருக்கே, கடவுளே!' என்று அவன் உள்ளம் துளைத்தது.

தன்னுடைய அப்பாவைப் பிச்சு பார்க்கவேண்டும் என்று சொன்னதும் பிரிஞ்ஜாலுக்கு என்னமோ



ஏதோ என்ற கவலை ஏற்பட்டுவிட்டது. பிச்சுவைப் பரிகாசம் செய்து அவன் குட்டெல்லாம் வெளிப்படுத்த வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தவன் உண்மையில் வெலவெலத்துப் போனான்.

''எங்க அப்பாவை எதுக்குப் பார்க்கணும், பிச்சு?'' என்றான் குழைந்த குரலில்.

''இந்தப் பையன்தானே பிச்சு? பிச்சு என்பது இந்தப் பையனா? இவனா இவ்வளவு திருடர்களையும் கண்டு பிடிச்சவன்? துளியூண்டு இருக்கானே!'' என்று இதுவரையில் அவனைப் பார்க்காதவர்கள் எல்லாரும் சூழ்ந்துகொண்டு ஒருவரை ஒருவர் விசாரித்துக்கொண்டார்கள்.

பிச்சு மிகவும் அழுத்தலாக பிரிஞ்ஜாவின் தோள்மேல் கையைப் போட்டுக்கொண்டு, ''வா, நாம் உன் வீட்டுக்குப் போய்ப் பேசலாம்'' என்று சொல்லிக்கொண்டே அப்பா கொடுத்த கவரைத் தன் பைக்குள் போட்டுக்கொண்டான். ஐயாசாமி விழிப்பதைப் பார்த்து, ''நான் இன்னும் அரைமணியிலே வரேன், அப்பா!'' என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் கூடக் காத்திராமல் கூட்டத்தை விட்டு வெளிப்பட்டான். ஆனால் ஐயாசாமி பின்னாலேயே வந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை.

போகும் வழியெல்லாம் பிரிஞ்ஜால் கெஞ்சாதபடியெல்லாம் கெஞ்சினான். மற்ற நண்பர்களும்

கூடவேதான் வந்தார்கள். "பார்த்தாயா, பிச்சு அழ அழ அடிக்கிறான் பயலே!" என்று அவர்கள் தங்களுக்குள் கண்ணைச் சிமிட்டிப் பேசிக் கொண்டார்கள். பிரிஞ்ஜால் காதிலும் இந்த வார்த்தைகள் லேசாக விழுந்தன.

வீட்டுக்குப் போனதும் பிரிஞ்ஜாலுடைய அப்பா, "என்னடா பசங்களா! வெயில் சந்திரிகையாக இருக்கோ?" என்று கன தடபுடலாகக் கேட்டார்.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன், ஸார்!" என்றான் பிச்சு.

"யார்டா நீ? மண்டிக்கடை ஐயாசாமி பிள்ளைதானேடா நீ? என்னை என்னடா பார்வை?"

"பதினைந்து வருஷத்துக்கு முன்னாலே அறுபத்து மூவர் உற்சவத்துக்குப் போயிருந்தேளே, அது விஷயமாகத்தான்!"

"என்னது, என்னது?" என்று அவர் உடனே தேள் கொட்டியதுபோலத் துடித்தார்.

மற்றப் பையன்களும் பிரமிப்புடன் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"அறுபத்துமூவர் உற்சவத்திலே உங்க பெண் குழந்தை காணாமல் போச்சோ இல்லையோ—அந்தப் பெண்ணைப் பற்றி நாலு வார்த்தை பேச வந்தேன்" என்றான் பிச்சு. உடனே அவர் குதித்த குதியையும் பண்ணிய உபசாரத்தையும் பார்க்க வேண்டுமே!

"என்ன நடந்தது சொல்லு, சொல்லு!" என்று கூறிவிட்டு உள் பக்கம் பார்த்து, "அடி.. அடீ.. கொஞ்சம் வந்துவிட்டுப் போறியா? உன் பொண்ணைப் பத்தி ஏதோ சொல்ல வந்திருக்கானே" என்று கத்தினார்.

"அந்தப் பெண் இப்போ ரொம்பச் சௌக்கியமா இருக்கு. கவலை வேண்டாம். ஆனால்.."

"ஐயையோ..என்ன ஆனால்?"

"ஒண்ணுமில்லே. அந்தப் பெண் மறுபடி வரவேண்டுமானால் எனக்கு ஓர் எக்கிரிமெண்ட் எழுதித் தரணும். அவளை வளர்த்து வருபவர்களுக்குக் கஷ்டமோ ஒரு விதமான நிபந்தனையோ இல்லாமல் பார்த்துக் கொள்வதாக எழுதிக் கொடுக்கணும். சம்மதமா?"

"நீ என்ன சொன்னாலும் சம்மதம்டாப்பா! இப்பவே, இங்கேயே எழுதித் தரட்டுமா?"

எல்லாரும் ஆவலுடன் பிச்சுவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதற்குள் ஐயாசாமியும் அங்கே வந்துவிட்டார். "வாங்கோ ஐயா! உங்க பையன் மகா மேதாவியாக இருக்கான். போன ஜன்மத்திலே கொடுத்து வச்சவர் ஐயா, நீங்க! எப்பவோ நடந்த ஒரு காரியத்தை இன்னிக்கி இவன் வந்து கண்டுபிடிச்சிருக்கானே. தெய்வப் பிறவிதான் இவன்" என்று பிரிஞ்ஜாலின் அப்பா அவரை வரவேற்றார்.

பிச்சு கேட்டபடி அவர் கடிதம் ஒன்று எழுதிக் கொடுத்தார். ஐயாசாமி அதில் சாட்சிக் கையெழுத்துப் போட்டார்.

"டேய் ஸ்ரீகாந்த், நீ ஓடிப்போய் குமாரி கல்பலதாவை அழைத்துக் கொண்டு அவள் வீட்டுக் கிழவரையும் வரச் சொல். வரும்போது அந்தக் கழுத்துச் சங்கிலியையும் அப்போது குழந்தையோடு அவர்கள் எடுத்துக் கொண்ட போட்டோவையும் கொண்டு வரச் சொல்!" என்றான் பிச்சு.

"யாரு? இந்தச் சினிமாவிலே

வேஷம் போட்டுக்கிறாளே, அவளா எங்க குழந்தை?'' - ஆச்சரியம், திகைப்பு, அருவருப்பு ஒரு புறம்; சமாதானம், குழந்தை கிடைத்த சந்தோஷம், புத்திர பாசம் மற்றொருபுறம் - இரண்டும் சேர்ந்து அந்தப் பெற்றோர்களை வாட்டியது.

''குமாரி கல்பலதா உங்களை விட்டுப் போனபோது கேவலம் இரண்டு பவுன் சங்கிலியோடு காணாமல் போனாள். ஆனால் இன்று இரண்டு லட்ச ரூபாய் சொத்துக்கு அதிபதியாக உங்களிடம் வருகிறாள், ஞாபகம் இருக்கட்டும்!'' என்றான் பிச்சு. எல்லாரும் வாயைப் பிளந்துகொண்டு, குழந்தை காணாமல் போனதிலிருந்து இன்றுவரையில் நடந்த கதையைப் பிச்சு சொல்லக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கல்பலதா வந்ததும் கன்றைப் பிரிந்த பசுபோல் கதறிக்கொண்டிருந்த பெற்றோர்கள் அவளை வரவேற்ற காட்சி கல்லும் கரைந்து உருகும் காட்சியேதான். அதை எழுத்தில், வார்த்தையில் வர்ணிப்பது என்பது சாத்தியமே இல்லை.

அசட்டு ஐயாசாமி (ஆமாம், அசட்டுப் பிச்சு இல்லை) உடனே எழுந்து, ''எல்லாம் சரி; பையன் மேதாவி, தெய்வப் பிறவி என்று சொல்வதெல்லாம் சரி. பரீக்ஷையிலே பையன் என்ன பண்ணியிருக்கான், பாருங்கோ!'' என்றார்.

பிச்சு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அது பள்ளிக்கூட ரிஸல்ட்! அதைப் பார்த்ததும் அவன் முகம் மலர்ந்தது. அந்தக் கடிதத்தைப் பிரஞ்ஜாலின் அப்பாவும் வாங்கிப் பார்த்து, ''என், எல்லாவற்றிலும் அபாரமாக மார்க் வாங்கியிருக்கிறானே! பிச்சுவுக்கு என்ன ஸார்?'' என்றார்.

''இருபத்தைந்தும் முப்பத்தைந்தும்தான் நிறையவோ?''

உடனே எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ''அது வகுப்பின் சராசரி மார்க்கு ஸார்! இவன் வாங்கியிருக்கிற மார்க்கு கடைசியில் இருக்கு, பாருங்கோ ஸார்!'' என்றார்கள்.

ஐயாசாமியின் முகத்தில் அசடு தான் வழிந்தது.

* * *

பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த் பிச்சுவிடம் விழுந்து விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். குமாரி கல்பலதா சொன்னது சொன்னபடி அந்த ஊரே கண்டிராத அளவுக்கு ஒரு பெரிய விருந்துபசாரம் நடத்தினாள். பிச்சு நடுநாயகமாக வீற்றிருந்தான். மண்டிக்கடை ஐயாசாமி அசட்டு விழி விழித்துக் கொண்டு அல்பாகா கோட்டு என்ன, ஜரிகைத் துப்பட்டா என்ன, அழகான தலைப்பாகை என்ன இந்த அலங்காரத்துடன் பர்வதத்தம்மாள் சகிதம் உட்கார்ந்திருந்தார். மறுபக்கம் சென்னையிலிருந்து இதற்காகவே வந்த இன்ஸ்பெக்டர் குரூப், ஸார்ஜண்ட் டவுட் முதலானோர் உட்கார்ந்திருந்தார்கள்.

விருந்து உபசாரம் பாதி நடக்கையிலேயே கீச்சு மூச்சு லோகு, ''ஒண்டர்புல் பிச்சுவுக்கு!'' என்று கீச்சென்று கூவினான்.

''ஜே!'' என்ற கூட்டத்தினரின் பதில் வானைப் பிளந்தது.

முற்றும்



# எங்கள் பகுதி

### * நிறை விருந்து

15-3-54 கண்ணன் அட்டைப் படந்தான் எவ்வளவு கவர்ச்சியாக இருந்தது! தின்பண்டம் திருடும் ஒரு சிறுவன்; அவனுக்குக் காவலாக ஒரு தங்கை!

சந்திரகிரிக்கோட்டை புதுமையின் எழிலோடு விறுவிறுப்பு நிறைந்த கதை. அடுத்து என்ன என்ற ஆவல், வாரத்திற்கு ஒரு முறை வரக்கூடாதா என்ற ஏக்கத்தை எழுப்புகிறது. ஓய்ந்த வேளையில்..என்ற பகுதி சிந்தனை விருந்து. 'ஆர்வி'யின் பாலகுமார், ஸாமியின் சித்திரங்களுடன் சிம்ம நடை போடுகிறான். சுவை ததும்பும் கதை.

'பைஜாமாவின் ஆசை' சுமாரான கதை. 'உருவத்தின் பரிசு' தோல்விக்கு மனிதன் பணிந்துவிடக்கூடாது என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது. கதையின் ஓட்டம் இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கலாம்.

'நல்ல ஞாபகம்' வேடிக்கையான சிறுகதை. ஆனால் சற்று நம்புவதற்குக் கூடவில்லை. தந்தையின் நலனுக்காகப் பாடுபடும் லட்சிய வீரன் கோபாலனைக் கதாநாயகனாகக்கொண்டது 'மூன்று வரங்கள்'. சிரிக்க வைத்திடும் கான்ஸ்டபிள் சித்திரங்கள் பலே ஜோர்! ஆனால் இயற்கையாக இல்லை என்பதுதான் ஒரு சிறிய குறை!

'நாய்வால்' அபாரமான அருமையான கதை. ஊராருக்கு உபதேசம்; தன் வாழ்வில் அவைகளைக் கடைப்பிடியாமை என்ற ஒருகுறையைக் கண்டித்துச் சுவைபட எழுதிய சங்கரசுப்புவின் கதையே இவ்விதழில் முதல் இடம் பெறுகிறது. விறுவிறுப்புடன் சிரிப்பும் சேர்ந்து அழகான கதையாக அமைந்திருக்கிறது. ஒரு சின்னஞ்சிறு குறை என்னவென்றால், சித்திரத்தில் வாசுவின் உருவம் கதையின் விவரிப்புக்குப் பொருந்தவில்லை. 'கைக்கு எட்டியது' சுமார்தான். தானே அந்த ஜோஸ்யர் என்பதை நிரூபிக்க எத்தனை நாழியாகும்? 'சரியான தீர்ப்பும்' நன்றாகத்தான் இருக்கிறது. புதுமையின் சுவை பொழியுமிடத்தில் பழமையின் புளிப்பு ஏற்படாதுதான்.

'அசட்டுப் பிச்சு' விடை பெற்றுக்கொள்ளப் போகிறான் என்ற

---

* இந்த இரண்டு கடிதங்களுக்கும் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

செய்தி வேதனையைத் தருகிறது. ஓராண்டில் தன்னுடைய 'அட்வென்சர்'களாலும் அட்டகாசங்களாலும், கண்ணன் தம்பி தங்கைகளின் மனசில் நிரந்தர இடம் பெற்றுவிட்ட பிச்சுவை எளிதில் மறக்க முடியுமா என்ன?

சுவை நிறைந்த 'கண்ணன்' இன்னும் பயன் நிறைந்தவனாக வேண்டும். 'கேட்டீர்களா' செய்திக் கொத்தின் கீழ் இன்னும் விஷயங்கள் தரலாம்.

மொத்தத்தில் திகட்டாத நிறை விருந்து கண்ணன். அழகிய மலர்கள் வசந்தத்தின் வருகையில் பூத்து, தென்றலில் ஆடும் போது ஏற்படும் மகிழ்ச்சியைத் தருகிறது.

—A. ஞானசேகரன், ஸ்ரீரங்கம்.

## * என் விருப்பம்

15-3-54 ஆம் தேதி இதழில் வெளிவந்துள்ள அட்டைப் படத்தை வரைந்தவர், குறும்புக்காரக் கண்ணனும் ராதாவும் அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் செய்கிற விஷமத்தில் ஒன்றை எங்களுக்குத் தெரியப்படுத்தி விட்டார். நான் போய்க் கண்ணன் அம்மாவிடம் சொல்லி விட்டேன். இந்த நேரத்துக்குள் அவர்கள் இருவருக்கும் நல்ல அடி கிடைத்திருக்கும் அல்லவா!

'சந்திரகிரிக் கோட்டை' 'அசட்டுப் பிச்சு' 'பால குமார்' இந்த மூன்று கதைகளையும் விமரிசனம் செய்து எழுத என்னால் முடியாது. இந்த மூன்று கதைகளையும் வர்ணித்து எழுத ஆரம்பித்தால் ஆற்றில் தண்ணீர் நிறைந்து போவதுபோல் கண்ணன் இதழ் முழுவதும் வெளியிட வேண்டும். ஆம்; அவ்வளவு அழகாகவும் நன்றாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கின்றன. அதனால்தான் எழுத முடியாது என்றேன். கண்ணன் அண்ணன் ஓர் இதழ் முழுவதும் வெளியிடுவாரா! அப்படியானால் நான் எழுதி அனுப்புகிறேன். நீங்கள் அனைவரும் படியுங்கள்.

பரிமேலழகன் எழுதிய 'பைஜாமாவின் ஆசை' என்ற கதை சுமார். 'உருவத்தின் பரிசு' என்ற கதையில் 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' 'நம்பிக்கையே தனது வெற்றி' என்ற இரண்டு கருத்தையும் மிகவும் தெளிவாகவும் எளிய நடையிலும் அழகாக எழுதி இருக்கிறார் கண்ணன். எதிலும் கவனிப்பு சிந்தனை இந்த இரண்டும் தேவை என்பதை 'நல்ல ஞாபகம்' என்ற சிறுகதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது. 'மூன்று வரங்களை' பிலோ இருதயநாத் நன்றாக எழுதியிருக்கிறார். இக்கதையில் உள்ள கோபாலன் தன் தகப்பனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றைச் செய்கிறான்.

'கான்ஸ்டேபிள் சித்திரங்கள்' புதுத் தினுசாகவும் சிரிப்பாகவும் இருக்கின்றன. 'காய்வால்' என்ற கதையை எழுதிய சங்கரசுப்பு ஊருக்கு உபதேசம் செய்கிறவர்களுக்குச் சரியான சூடு போட்டிருக்கிறார்.

'கைக்கு எட்டியது' என்ற கதையைப் படித்ததும் பாவம் என்ற வார்த்தை நம்மை அறியாமலே வருகிறது.

'சரியான தீர்ப்பு' எழுதிய சுந்தரேசன் தொடர்ந்து கதை எழுதுவார் என்று நம்புகிறேன். 15-3-54 இதழில் 'எங்கள் பகுதி'

யில் பரிசு பெற்ற வி. ஆர். கமலா தேவியின் விமரிசனம் நன்ருக இருந்தது.

ஆங்கிலம், ஹிந்தி ஆகிய பாஷைகளில் உள்ள சிறுவர் கதைகளை மொழிபெயர்த்துக் கண்ணனில் வெளியிட்டால் நன்ருக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

'அசட்டுப் பிச்சு'வை மிகச் சீக்கிரத்தில் முடிக்கப் போவது பற்றி மிகவும் வருத்தமாக இருக்கிறது. அசட்டுப் பிச்சுவிற்குப் பதிலாக 'ஆர்வி' வேறு தொடர் கதை எழுதுவார் என்று எதிர் பார்க்கிறேன்.

—கே. இளமதி, மதுரை.

## 'ஜில்'லென்ற இதழ்

15-3-'54 இதழ் மொத்தத்தில் இந்தக் கோடைகாலத்திற்கு எற்றபடி வெகு 'ஜில்'லென்று இருக்கிறது! ஆம்! வெகு ஜோர்!!

'பிஸ்கட்' திருடும் பையன்; அம்மா வருகிருளா என்று காவல் காக்கும் தங்கை, இருவரும் வெகு ஜோராக அட்டைப் படத்தில் காட்சியளிக்கிருர்கள்.

'சிரிப்பு' என்ற குட்டிக் கதை சுமாராக இருக்கிறது. 'சந்திரகிரிக் கோட்டை' இந்த இதழில் வெகு விறுவிறுப்பாக அமைந்துள்ளது. 'புலிக்குட்டி யார்?' போன்ற பல மர்மமான சம்பவங்கள், அடுத்த இதழ் எப்பொழுது வரும் என்ற ஆவலைத் தூண்டிவிடுகின்றன. 'பாலகுமார்' வழக்கம்போல் நன்ருக இருக்கிறது. சித்திரங்கள் வெகு எடுப்பாக அமைந்துள்ளன.

முதல் கதையான 'பைஜாமாவின் ஆசை' சுமாராக இருக்கிறது. பாவம்! ஷரீபுக்குப் பைஜாமா போடக் கொடுத்து வைக்கவில்லை போலும்.

'உருவத்தின் பரிசு' என்ற கதை சுமாராக இருக்கிறது. ஆனல் படிப்பதற்கு விறுவிறுப்பாக அமைந்துள்ளது.

'நல்ல ஞாபகம்' என்ற குட்டிக் கதை வெகு ஜோர்! திருட்டுத் தகப்பனை காட்டிக் கொடுக்காமல் திருட்டுச் சொத்தைக் கண்டுபிடித்து, தகப்பனை நல்வழிப் படுத்திய உத்தமச் சிறுவனைப் பற்றிய கதை 'மூன்று வரங்க'ளில் மிளிர்கிறது. 'கான்ஸ்டேபிள் சித்திரங்களே நம்பர் சொல்லுங்கள்!' என்ற கேலிச் சித்திரத்தைப் பார்த்த உடனே சிரிப்புப் பொங்கி வருகிறது.

'மனித குண'த்தைச் சுட்டிக் காட்டும் 'நாய் வால்' என்ற கதை படிப்பதற்கு விறுவிறுப்பாக இல்லை.

'கைக்கு எட்டியது' என்ற குட்டிக் கதை இரண்டு வருஷங்களுக்கு முன்பு வெளிவந்த கதையைத் தழுவி எழுதியது.

ஆனல் கடைசியில் ஒரு வருந்தத்தக்க விஷயம்! ஆம், 'அசட்டுப் பிச்சு' எங்களைவிட்டு இன்னும் இரண்டு இதழ்களில் பிரிந்து விடப்போகிருன் என்பதை அறிந்ததும் எனக்குத் திடுக்கென்றது! இவ்வளவு சீக்கிரத்தில் அவனை எங்களிடமிருந்து பிரிக்கப் பார்க்கிறீர்களே! 'ஜக்கு' இரண்டு தொடர் கதைகளாக வந்தது போல் 'அசட்டுப் பிச்சு'வையும் இரண்டு தொடர்கதைகளாகப் போடுங்கள்!

—P. S. வேங்கடரமணி,
வாணியம்பாடி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

211789

# பேனா நண்பர்கள்

1. பி. எஸ். நவீன் சந்திரன், 10 சௌராஷ்டிரா சந்து, மேல
சி வீதி, மதுரை.

2. P. கண்ணன், 7, குட்ஷெட் தெரு, மதுரை.

3. C. R. R. நாத், 175, தெற்குவெளி வீதி, மதுரை.

4. மோகன், 6/3 B, செல்லப்ப முதலி வீதி, குயப்பேட்டை,
சென்னை-12.

5. M. P. பத்மநாபன், 58, வேங்கடேசபுர காலனி, அயனாவரம்,
ன்னை-23.

6. N. பக்தவத்ஸலம், நான்காம் படிவம் (அ) பிரிவு, மரவனேரி,
தி வித்யாலயா உயர் நிலைப்பள்ளி, சேலம்.

7. P. P. செல்வன், உபதலைவர், க. கி. கழகம், புலியூர், P.O.
ருச்சி ஜில்லா.)

8. R. M. கிருஷ்ணராஜன், 33, மேல்தெரு, திருப்பத்தூர். (வ. ஆ.)

9. V. ராஜசேகரன், 6, கருர் கிருஷ்ணசாமி நாயுடு தெரு,
லூர். (வ. ஆ)

10. V.N. வேதமூர்த்தி. 25/1, லால்சிங் குமணன்தெரு, வேலூர்.

11. T. R. திருவேங்கடம், 68, பிஷர் ரோடு, ரெயில்வே காலனி,
பெரம்பூர், சென்னை-23.

12. A. M. வாபன், C/o A. S. A. காதர், மல்லவப்பிட்டி, குரு
நாகல். (சிலோன்.)

கண்ணன் அடுத்த இதழில்

**தூங்கும் அழகி**

அற்புதமான

**புதிய சித்திரத் தொடர்கதை**

ஆரம்பமாகிறது

ந்தாதாரராகச் சேர இது நல்ல சந்தர்ப்பம்!

Reg. No. M. 5

# புதிய கண்ணன் வெளியீடுகள்

## ஏரிக்கரை மாளிகை

பாட்டி ராஜா-ராணிக் கதைகள் சொல்வாள்: தாத்தா மந்தி வாதி - வீரர் கதைகள் சொல்வார். எல்லாம் கேட்கக் கேட் எங்கேயோ ஒரு தனி உலகத்துக்கு நம்மைக் கொண்டு சென் விடும். ராஜகுமாரன் வருவான்: ராஜகுமாரி வருவாள். வீர வருவான்; வாள் கொண்டு சாகஸச் செயல்கள் எல்லாம் செ வான். அற்புதத்தைச் சாதிப்பான். நாமோ ஆனந்தத்தில் ம போம். அப்படிப்பட்ட புத்தகம்தான் இது. அருமைய படங்கள் நிறைந்தது.

**விலை 8 அணு**

## மின்னல் அரக்கன்

இதில் உள்ள கதைகள் எல்லாம் அற்புதமான கர்ண ப பரைக் கதைகள். மாயாஜாலங்கள் புரியும் மாயாவிகளு சோதனைகளில் வெற்றி பெறும் வீரர்களும் ஆபத்தில் சிக்கித் தவ கும் ராஜகன்னிகைகளும் இந்தக் கதைகளில் பாத்திரங்களா வருகிறார்கள். கதையின் போக்கும் கற்பனை அழகும் நம் உள்ள தைக் கவரக்கூடியவை. படித்துப் பாருங்கள். பரவசம் கொள் வீர்கள்!

**விலை 8 அணு**

## வால் அறுந்த குரங்கு

வால் அறுந்த குரங்கு, இதோ இந்தப் பிள்ளை, ஈயின் கல முதலிய ஐந்து பாட்டுக் கதைகள் அடங்கிய சிறுவர் புத்தக பாட்டைப் பாடிக்கொண்டே எழுத்துக்களைக் குழந்தை கற்றுக்கொண்டு விடுவார்கள். வர்ணப்படங்கள் நிறைந்தது.

**விலை 8 அணு**

## பார்வதியும் ஏழு சித்திரக் குள்ளர்களும்

கதை பழங்காலத்துக் கதைதான். என்றாலும் படிக் படிக்க, கதையின் போக்கு உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த் அத்தனை சுவாரஸ்யமான கதை.

**விலை 3 அணு**

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

**கண்ணன் காரியாலயம்**

மயிலாப்பூர் :: :: சென்னை—4.